
# சிரித்திரன்

ஐப்பசி 2004

செய்தொழில் தெய்வம் - சிரிப்பே சீவியம்






"எங்கை துலைக்கோ போறியள்?"

"தமிழ்ப் படம் பாக்கப் போறம்...!"

"???...."



மணமகன் : கண்ணே என்னைக் கண்டதும் உனக்கு காதல் ஏற்பட்டதா?

மணமகள் : இல்லை... கேட்டதும்.... நீங்கள் என்ஜினீயர் என்று கேட்டதும்..

தமிழர் தாயகத்தின் முன்னோடி நகைச்சுவை ஏடு

25/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRIMA தயாரிப்புக்கள் என்றும் தூய்மையானவை

## தற்போது வடமாகாண சந்தையில்





என்ன! கமலா உங்க வீட்டுச் சமையலறையிலிருந்து
ஓரே கம... கம... வென்று வாசனை வீசுகிறதே!

ஓ அதுவா! நான் இப்ப பிறிமா எண்ணை, பிறிமா நூடில்ஸ்....
என பிறிமா உற்பத்திகளையே சமையலுக்கு பயன்படுத்திறன் மாமி...

"அதுதானே! பிறிமா என்றாலே பிறிம்பா செ[illegible]
தனியான மணம் குணம் தான்...."

## பிறிமா தேங்காய் எண்ணெய்,
## பிறிமா மரக்கறி எண்ணெய்,
## பிறிமா நூடில்ஸ்,
## பிறிமா மா வகைகள்,
## ஈஸ்ட் வகைகள்.

## அனைத்திற்கும்...

## வடமாகாண ஏக விநியோகஸ்தர் :

# விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ்ப்பாணம்.


Registered as a Newspaper at the G.P.O Sri Lanka Regd. No. P.Q. 35/000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ மக்களின்
இதயங்களைக் கவர்ந்த
நகைச்சுவை சித்திரத் திங்களிதழ்

# சிரித்திரன்

மீண்டும் வெளிவருவதையிட்டு எமது வாழ்த்துக்கள்...



சிரிக்கவும் நிறைய சிந்திக்கவும்...

**நீங்கள் அழுமூஞ்சிகளாகவோ**
**சிடுமூஞ்சிகளாகவோ இருக்காதீர்கள்...!**
**வாழ்வில் மகிழ்ச்சியை இழந்து விடாதீர்கள்**

சிரித்திரன் உங்களை சிரிக்கமட்டுமல்ல சிந்திக்கவும்
வைக்க வருகை தருவதை
வரவேற்கிறோம்......

## தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

**தெல்லிப்பளை.** **தொலைபேசி: 021 222 3053**
**021 222 3054**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவரிகள்.....


'நேற்று'
உன்னை விட்டு சென்றுவிட்டது
நாளை
இன்னும் உன் வசப்படவில்லை
இன்று - மட்டுமே
உன்னிடம் உள்ளது.

-பார்க்

## சீனித்தாத்தா



## எரிச்சல் ஏகாம்பரம்




## மெயில்வாகனத்தார்

-எத்தினை வருஷத்திற்குப் பிறகு சந்திக்கிறம்.. எவ்வளவு இடர்களுக்கும் - இன்னல்களுக்கும் பிறகு ஒருத்தரை ஒருத்தர் முகம் பார்க்கிறம். - துக்கமோ... சந்தோஷமோ... இனம்புரியாத ஏதோ ஒன்று நெஞ்சை அடைக்கிறது.... கண்களிலும் ஈரக்கசிவு... புன்னகைக்குப் பின்னால் புதையுண்டு போயிருக்கும் சோகம் எனக்கும் உங்களுக்கும் நல்லாப்புரியும்.... வார்த்தைகளை விடவும் மௌனம் ஆழமான அர்த்தம் பொதிஞ்ச விஷயங்களைப் பேசிவிடும் தருணம் இதுதான் பாருங்கோ... - இங்கே தான் மனிதம் தன்னை இனங் காட்டியும் கொள்கிறது...

+++

எங்கட பரியாரித் தாத்தாடை மகன் பரமலிங்க சாத்திரியாற்றை நடுவிலான் கனகலிங்கம் கடல்தாண்டிப் போய் கனகாலமெல்லே... இந்தியப்படை வரமுந்தி ... ஒப்பிறேசன் லிபரேசன் ஆமித் தாக்குதலோ்டை போனவன் இப்பதான் ஊருக்கு வந்திருக்கிறான்...

-அவன் கனடா போகேக்கை சாத்திரியார் குடும்பம் இருந்த நிலை கந்தறுந்துபோன நிலையெல்லே.. அந்தப்பொடி அங்கைபோய் கஷ்டப்பட்டு உழைச்சு அனுப்பிய காசிலை நாலு குமர் கரைசேர்ந்திட்டுது. கடைசிப்பொடி கடை போட்டு நல்லாயிருக்கிறான்... சாத்திரியாரும் மனுஷியும் தங்கத்தாலை பளபளக்கினம்....எல்லாம் அவன்ரை உழைப்புத்தானே....!

-இப்ப கனடாவிலையிருந்து வரேக்கை அங்கையே ஒரு பெட்டையை விரும்பிக் கட்டிக் கூட்டிவந்திட்டானாம்... சாத்திரியாரும் மனுஷியும் வீட்டுப்படியேற விடமாட்டன் எணடிட்டினமாம்.... அவளை விட்டிட்டு, ஊரிலை ஐம்பது இலட்சம் சீதனத்தோடை ஆரையோ பார்த்து வைச்சிருக்கினமாம், அவளைக் கட்டட்டாம்...!

- என்ன அநியாயம் பாருங்கோ! இவ்வளவு உழைச்சு... இத்தனை உசரத்திலை ஏத்திவைச்சவன் தனக்குப் பிடிச்ச பிள்ளையைக் கட்ட உரிமையில்லை என்றால் என்ன நியாயம்?

-முந்தநாள் வீட்டை வந்தான் மனுஷியோடை ... நான் அவனை வரவேற்று வாழ்த்த அவன் அழுதிட்டான் பாருங்கோ... மெயிலு மாமா நான் பணத்தை உழைச்சுக் குடுத்ததாலை பாசத்தை இழந்திட்டன் என்றான்... எனக்கு ஒருமாதிரியாப் போட்டுது...

-நேற்றுக் காலமையே என்னட்டை மட்டும் சொல்லீட்டு கனடாவுக்கு வெளிக்கிட்டிட்டான்! பாருங்கோ... உறவுகள் மோசம் செய்யேக்கை ஊர்ப்பாசம் என்ன செய்யுமாம்?

-இப்ப சாத்திரி என்னோடை கதைக்கிறேல்லை பாருங்கோ...

-அவன் கிடக்கிறான் காசுப்பிசாசு...



PUBLIC LIBRARY JAFFNA.
VANNARPONNAI BRANCH LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகார ஆனந்த தாண்டவம்




## அறைகூவல்



"விழிப்போரே நிலை காண்பார்!
விதைப்போரே அறுத்திடுவார்
களை காண் டோறும்
அழிப்போரே அறஞ்செய்வார்
அறிந்தோரே உயர்ந்திடுவார்!
ஆதல் ஆர்வம்
செழிப்போரே, இளைஞர்களே,
எம்நாட்டுச் சிங்கங்காள்!
எழுக நம்தாய்
மொழிப்போரே வேண்டுவது
தொடக்கஞ்செய் வீர்செல்வீர்
மொழிப்போர் வெல்க!"

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்



# சிரித்திரன்

சிரித்திரன் வாசகர்களுக்கு
அன்பார்ந்த வணக்கம்.
கிட்டத்தட்ட ஒன்பது ஆண்டுகளின் பின்னரான
சந்திப்பு இது.
இந்த ஒன்பது ஆண்டுகால இடைவெளி என்பது
ஒருபெரும் வரலாற்றையே தன்னுள் அடக்கியதாக
எம் முன்னே பரந்து விரிந்து எல்லையற்று
பிரமிக்க வைத்து நிற்கிறது.
இன்று சிரித்திரன் அதன் ஞானத் தந்தையின் வழிகாட்டலில்
தமிழ் மக்களுக்கான தன் பணியைத் தொடர்வதில்
பெருமையும் மகிழ்வும் அடைகிறான்.
இடிப்பிற்கும், இன்னலுக்கும், அடக்குமுறைக்கும், ஆதிக்க
வெறிக்குமிடையே அல்லல் பட்டு ஆற்றாது துடித்துக்
கொண்டிருக்கும் எம்மக்களுக்கு சிரித்திரு என்று
புன்னகைத்துக் கூறும் திராணி சிரித்திரனுக்கு கிடையாது.
இப்போது சற்று சிரிக்கவும், ஆழமாகச் சிந்திக்கவும்
வெற்றிகரமான வாய்ப்பொன்று கிடைத்துள்ளது.
குனிந்த தலைகள் நிமிர்ந்து சிரிக்கும் நேரமிது. எனவே தான்
சிரித்திரனின் மீள்வருகை சாத்தியமாகியுள்ளது.

* * *

மனிதனைச் சிரிக்கத் தெரிந்த மிருகம் என நகைச்சுவையாக
வர்ணிப்பவர் பெர்னாட்ஷா.
இது யாரையும் நோக வைக்கும் அல்லது
அவமானப்படுத்தும் நோக்குடன் சொல்லப்பட்டதல்ல...
மனிதனிடமுள்ள மிகச் சிறந்த தனித்துவ இயல்பே சிரிப்புத்தான்.
சிரிக்க மறந்த மனிதன் சிந்திக்கத் தவறிய மனிதனேயாவான்.
உம்மணா மூஞ்சிகளாய் இருப்பது மனிதத்தின் சிறந்த பண்பை
நிராகரிப்பவர்களால் மட்டுமே முடிந்த விடயமாகும்.
மனம் விட்டுச் சிரியுங்கள் - மனக் கனம் விட்டுப் போகும்.

* * *

'சிரித்திரு அதுவே சிறந்த திரு' என்றே
மாமனிதர் சிரித்திரன் சுந்தர்
எவரையும் வாழ்த்துவது வழக்கம்.
'செய்தொழில் தெய்வம் - சிரிப்பே சிவீயம்'
என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டு
சிரித்திரனை வெளியிட்டவர் அவர். அந்தச்
சிந்தனையாளரின் வழி தொடர்ந்து சிரித்திரனை
மீண்டும் வெளிக்கொணர்ந்துள்ளோம்.
-உங்கள் ஆதரவே எங்கள் பலம்.
-சிரியுங்கள் - சிந்தியுங்கள்
நன்றி!

நிலைக்கண்ணாடி


செய் தொழில் தெய்வம்
சிரிப்பே சிவீயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்பியன் செல்வனின் 2 குறுங் கதைகள்

திடீரென மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்




தது.

மக்கள் 'வருவாய'க்கும்- 'வாய்க்கு'மிடையே பெரிய இடைவெளி ஏற்பட்டுவிட, வயிற்றைக் காய விடலாயினர்.

காய்ந்த வயிறு வைரமாக மாறுவதற்குப் பதிலாக, ஜுவாலை விட்டு எரியத் தொடங்கியது.

நிதிமந்திரியை நோக்கி வெப்பச் சுடர் பரவலாயிற்று.

'எதற்காக எங்கள் வயிற்றிலடிக்கிறீர்கள்?' - கேள்வியின் உக்கிரம் மந்திரியின் செவிப் 'பறை'யில் போர் முழக்கம் கேட்டது.

"எங்களை எதற்காகப் பாராளுமன்றம் அனுப்பினீர்கள்?"

"சோசலிசம் கேட்டு..."

"அதைத் தான் செய்து கொண்டிருக்கிறோம்."

"எப்படி?"... மக்கள் அதிர்ந்தார்கள்.

"பணக்காரர்களின் தேவைப் பொருட்கள் எந்தளவிற்கு விலை உயர்ந்திருக்கிறது தெரியுமா? கார், வீடு, சமையல் பொருட்கள், உடை, வாசனைப் பொருட்கள் எல்லாமே விலை உயர்ந்திருக்க, உங்கள் அத்தியாவசியப் பொருட் கள் மட்டும் விலை குறைவாக இருக்கலாமா? இப்போது விலையேற்றத்தில் சோசலிசத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். நாளாக... நாளாக.... மற்ற..." - மந்திரி வார்த்தைகளை முடிக்கவில்லை.

-மக்கள் புதியதொரு இடைத் தேர்தலுக்கான ஆயத்தத்தில் மந்திரியை நோக்கிப் பாய்ந்தனர்.

நதி அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. படகு ஒன்று நதிக்காற்றில் சோபனம் கொண்டு ஹம்ச தூளிகா மஞ்சமென அசைந்து கொண்டிருந்தது.

கரையோர இயற்கை வனப்புகள் பின்னோக்கிச் சென்று கொண்டிருந்தன. அழகும், அமைதியும். எங்கும் இன்ப லோகம்.

நதியும் - படகும்

உயிர்க்குலமும்- பௌதிகத் தோற்றங்களும்


இயக்கங்கள்- முன்னோக்கியா? பின்னோக்கியா?

திடீரென நீரின் அளவு அதிகரித்தது. படகின் வேகம் தடம் புரண் டது. பாதைகளில் பாறைகளும் படுகுழிகளும் பயங்கர வரவேற்பளித்தன.

படகு புரண்டெழுந்தது.

படகுப் பயணிகள் நீர்ப்போராட்டத்தில் கரை ஒதுங்கினர்.

தோல்வியின் சின்னமா?




## நியதி

வெற்றியின் வெள்ளைக் கொடியா?

பயணிகள் இயற்கைக்கு நன்றி கூறினார்கள்.

நதி அவர்களின் ரட்சகனாகக் காட்சியளித்தது.

"ஆஹா! நதி என்னமாய் முன்னோக்கிப் பாய்கிறது" நதியைத் தழுவியவாறு தென்றல் கேட்டது:

"இதுவென்ன வியப்பு! உன் இயல்பான செயலே மனிதனுக்கு விந்தையானது எப்படி...?"

"அவன் வாழ்வதற்கான போராட்டத்தை மறந்து விட்டான் அல்லது இயற்கையின் தத்துவத்தை மறந்துவிட்டான்."

-மனிதன கரையில் நின்று ஆற்றின் அமைதியை வியந்து கொண்டிருந்தான்.

## வண்ணாணம் விசாலாட்சி

ஊருக்குச் சொல்லுமாம் பல்லி கழுனிப் பானையில் விழுமாம் துள்ளி எண்டு சும்மாவே சொல்லுறது. உனக்கில்ல மகளே உபதேசம் ஊருக்கெண்டு. பின்ன என்னடாப்பா - இந்தா அந்தா எண்டு வருஷமும் பறந்து தான் போகுது. பொம்பிளையளுக்கு சம உரிமை. பொம் பிளையளுக்கு விடுதலை எண்டுறதெல்லாம் சும்மா... எங்கபார். பெண்ணாகப் பிறந்ததுகள் வாய்திறந்தாக் குற்றம் என்னமோ சொல்லுவினமே வேண்டாத மருமகள் கைபட்டா குற்றம் கால்பட்டா குற்றம் எண்டு. அப்பிடிப் போகுது கதை. எங்கட சங்கரியற்ற மூத்தவள் எங்கயோ இலண்டனில் படிச்சுப்பட்டம் வாங்கினவளாம். சும்மாயில்ல, ஆள் சிவில் லோவிலும் வலு கெட்டி. அவா இஞ்ச ஏதோ பெண்ணியப் பத்திரிகை நடத்துறாவாம். கிராமம் கிராமமாய்ப் போய் பொம்பிளையின்ர உரிமையள விடக் கூடாது எண்டு கூட்டம் போட்டுப் பேசுறது மனிசி. மனிசி, பேசினா கனல் தெறிக்கும். அப்பேக்கொத்த மனிசி கண்ணே கண்ணேயெண்டு ஆசைக்கொரு பெண், ஆஸ்திக்கொரு ஆணெண்டு ரெண்டு பிள்ளையள் தானே. மனிசி அவ்வளவு செல்லமா வளத்தது. மூத்தது பெட்டை படிச்ச இடத்தில ஆரோ பெடியனை விரும்பியிருக்கு. பொடியன் இவயட பக்க மில்லையாம். மனிசிக்கு அதுக்குப் பிறகுதான் ஓடி வெளிச்சது.



அதெப்பிடி எங்கட கலாசா ரம், பண்பாடு, விழுமியங்களைக் கைவிடலாம். மனிசி கொக்கரிச்ச கொக்கரிப்பில பெட்டை வீட்டை விட்டு வெளிக்கிட்டிட்டாளாம். பெடியனுக்கெண்டாலும் எங்கட பாரம் பரியத்தை விடக் கூடாது எண்டு முப்பது லெச்சம் சீதனத் தோட அசத்திட்டாளே! அது வீட்டில... பின்னேரம் எங்கட ஊரில பெண் ணுரிமைபேசப்போறாவாம் வாறியளே?

தமிழ்க்கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலரசம்



## சிரித்திரன் அகராதி

**குடும்பக் கட்டுப்பாடு** : பிள்ளைச் செல்வம் விரும்பாதோர் அனுஷ்டிக்கும் விரதம்.

**உத்தியோகஸ்தன:** காரியாலயத்தில் மாதச் சம்பளத்திற்கு தவம் கிடக்கும் யோகி.

**பேச்சு** : மனிதன் தன்னைப் புழுகுவதற்காக கடவுள் கொடுத்த வல்லமை.

**அன்பு** : தான் வாழ்வதற்காக மற்றோருக்கு மனிதன் காட்டும் பாசாங்கு.

**யுத்தம்** : நாகரீகமென்னும் ஓவியத்தை அழிப்பதற்காக அரசியல்வாதிகளால் தயாரிக்கப்படும் 'இறேசர்'

## சிரிப்புப் பழமொழிகள்

- **சாண் பாம்பானாலும் முழத்தடி கொண்டடி.**
- **ஏர் உழுகிறவன் இழப்பமானால் எருது மச்சான் முறை கொண்டாடும்.**
- **அசைந்து தின்கிறது ஆனை. அசையாமல் தின்கிறது வீடு.**
- **பொரிமாவை மெச்சினான் பொக்கை வாயன்.**
- **கழுதைக்குபதேசம் காதிலே ஓதினாலும் அபயக் குரலே குரல்.**

## சரியில்லை மெத்தச் சரியில்லை

*1. சொற்பொழிவாளர் பேசும் நேரத்தை நிகழ்ச்சி நிரலில் அறிவித்துவிட்டுப் பின்பு வரவேற்பாளரே அவருக்கு இடம் கொடாது பேசிக் கொண்டிருப்பது.*

*2. சொற்பொழிவாளர் இடையிடையே சபையோர்களே! நேரமாகிவிட்டது அதனால் இரண்டொரு வார்த்தைகள் முக்கியமாகக் கூறிவிட்டு எனது பேச்சை முடிக்கிறேன் என்று விட்டு மேலும் பேசிக்கொண்டிருப்பதுடன் சபையோரை முணு முணுக்க வைப்பது.*

*3. காலம் கடந்து பேசும் சொற்பொழிவாளர் சபை யோரின் குழந்தைகள் பசி தாகத்துடனிருக்க சற்றும் லட்சி யம் செய்யாது தான் மட்டும் தாகசாந்தி பண்ணிவிட்டு உபதேசம் பண்ணுவது.*

## இரண்டு கவிதைகள்



### ? மனசு



I

*சில நாட்களாய்*
*இந்தக் கோழி கேருகிறது.*
*அப்ப?*
*இன்றோ*
*நாளையோ*
*முட்டையிடும்.*

II

*வேலி தாண்டிய*
*கோழி;*
*தெருவில் கிடக்கிறது.*
*பேருந்துடன் மோதுப்பட்டு*
*நசியுண்டு.*

III

*இடிந்து போகிறது மனசு*
*ஒரு கோழியின்*
*உயிருக்காகவல்ல*
*பல முட்டைகளுக்காக.*

**-ஆவரங்கால் சுதன்-**

### உண்மை

*வேர்களின்*
*குறட்டைச் சத்தம்*
*கேட்டும் சிரிக்கிறது*
*ரோஜாக்கள்.*
*கிளைகளை நீட்டி*
*மல்லாக்காய் கிடந்து*
*காற்றிற்கு புரள்கிறது மரம்.*
*ஒவ்வொரு பூவிற்கும்*
*ஒவ்வொரு உண்மை*
*பூசப்படுகிறது.*
*ஒரு பூவின் உண்மை*
*இன்னொரு பூவிற்கு*
*பொய்யாகவும்*
*இன்னொரு பூவின்பொய்*
*இதற்கு உண்மையாகவும்.......*
*இப்படியாக*
*பூக்களின் முரண்பாட்டுக்குள்*
*முறுக்கேறும் சத்தம் கேட்டு*
*கண்ணயர்கிறது மரம்.*
*விடிந்ததும்*
*எழுந்து பார்க்கிறது*
*பூக்களெல்லாம் கொட்டிப்போய் கிடக்கிறது,*
*மூச்சுப்போய்........*
*மீண்டும் சிரிக்கிறது மரம்*
*மௌனமாய்...........*


**-ப.அருள்நேசன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தர நகை

## காலத்தை வென்று நிற்கும் சுந்தரின் கருத்தோவியங்கள்



சாவரித்தம்பர் : முருகேசருடைய மகள் லண்டனில் ஒரு வெள்ளைக்காரனை கல்யாணம் பண்ணிவிட்டாளாம்.
சின்னக்குட்டி: சொந்த மச்சான் ஒரு இலட்சம் சீதனம் கேட்டான்.... அவள் ஒரு வெள்ளைச் சல்லியும் குடாமல் ஒரு வெள்ளைக்காரனைக் கட்டிவிட்டாள்.




Mrs டா : ஹூ இஸ் தெட்சணா மூர்த்தி டார்லிங்?
Mr டா : அவர் தவில் என்ற நாவல் எழுதிய பேமஸ் நவலிஸ்ட்.
Mrs டா: நான் வாசிப்பதற்கு ஒரு தவில் வாங்கித் தாறீங்களா டார்லிங்.
Mr டா: வை நொட்...







## நவீன விஸ்வாமித்திரர்...




அவன்: நான் லஞ்சம் வாங்குவதில்லை. ஆனால் நீங்கள் அன்பளிப்பென்று தரும்போது எனக்கு மறுக்க மனம் வருவதில்லை.



இராவணன் மேடையில் பேசினால்...




## மைனர் மைச்சான்




PUBLIC LIBRARY
JAFFNA.
VANNARPONNAI BRANCH LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எப்போது உனக்கு நோய் சுகமானது?


நீங்கள் வேலை நிறுத்தம் செய்த போது.



கமலா: ஏண்டி உன் கணவன் உன்னை வறுமையில் போட்டு வதைக்கிறாரே... அன்னிய நாடு போய் நாலு பணம் அனுப்பலாமே.

விமலா: அவர் ஒரு சரியான பைத்தியம்... தேசியவாதி...

# ஜோக்கிரட்டீஸ் ஜோக்ஸ்



மாமன் : நான் சீதனமாகத் தந்த இந்தக் கார் பிடித்திருக்கா?

மருமகன்: தயவுசெய்து இறங்கித் தள்ளுங்க... கார் பெற்றோல் இல்லாமல் நின்று விட்டது.



கணவன் : நான் அந்நிய நாட்டிலிருந்து அனுப்பிய பணத்தையெல்லாம் என்ன செய்தாய்?

மனைவி: தங்க நகை, வைர நெக்லஸ் எல்லாம் செய்து திருடனிடம் குடுத்திட்டேன்.



டைரக்டர் : கொள்ளையடிக்கும் காட்சியில் இவ்வளவு தத்ரூபமாக நடித்திருக்கிறீர்களே.

நடிகர் : முன் அனுபவம் தான் காரணம். இரண்டு வருஷம் ஜெயில்லைகூட இருந்தனான்.

டைரக்டர் : .........?



உன்னை சங்கீதம் படிப்பித்தது பிழையாப் போச்சு... மருமகன் கேட்டதெற்கெல்லாம் சரி சரி என்கிறாயே...





என்ன கங்காணியார்... பேச்சு வார்த்தை இழுபட்டுக்கொண்டு போகிறதே!?

இது ரப்பர் நாடு பாருங்க இழுபடத் தான் செய்யும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி மாலதி தியாகராசா, நல்லூர்.

❓ **தமிழ் இனம் எப்படி பெண் இனத்தை மதிக்கின்றது?**

☛ அன்று கண்ணகிக்குச் சிலை வடித்துப் பூசித்தது. இன்று சீதனம் கேட்டு கண்ணீர் வடிக்க வைக்கிறது.

சி.ராமநாதன், வவுனியா.

❓ **செலவுகாற மனைவி பற்றி உமது கருத்து?**

☛ அவளொரு தெய்வம்... தெய்வம் ஒரு வரையறைக் குள் அடங்குவதில்லையல்லவா...

## சுந்தரப் பதில்கள்

விரிந்த தமிழ் உள்ளவரை நிலைத்து வாழும்.
விளக்கெடுத்து அற்புதமாய் விளக்கம் சொல்லும்.
சிரிக்க வைத்தே சிந்தனையை உயர வைக்கும்.
சிரித்திரனில் வந்துதித்த மகுடி பதில்!
புத்தனுக்கும் புதுவிதமாய் சேதி சொல்லும் - வேத
உயர் நூல்கள் சொல்லாத நீதி சொல்லும்.
முத்துக்களாய் ரத்தினமாய் வைரங்களாய் - உயர்
தத்துவங்கள் மலர்ந்து நிற்கும் மகுடி பதில்.
குறும்புமொழி பின்னாலே பிரம்பிருக்கும் - மகுடி
பகிடிக்குப் பின்னாலே பாடம் சொல்லும்!
உருவத்தில் சிறுவரிதான் மகுடி பதில் - உரைத்த
கருத்தினிலோ கடலளவு பரந்திருக்கும்!
கதைகள் புனையாத பாரதியார் - இவர்
பாடல்கள் எழுதாத கண்ணதாசன்!
நடிப்புலகம் காணாத கலைவாணர் - மகுடி
மானுட நேயத்தில் ராமலிங்கர்!
ஈழத்து வள்ளுவரோ மகுடியென்று - நம்
இரு விழியும் உயரும் படி செய்த சுந்தர்
காலத்தை வெல்லுகின்ற பதில்கள் தந்தார் - பதிலும்
இலக்கியமாய் போற்றப்படும் விந்தை செய்தார்!
இசைஞானி கலைஞானி கதைஞானி போல்
பதில் ஞானி யார் என்று கேள்வி வந்தால்
இசையோடு ஈழமக்கள் ஒன்றே சொல்வர்
சிரித்திரனாம் மகுடியார் தான் என்றே பதில்!
நியதிகளை வாழ்க்கையெனும் பயணம் தன்னை
தத்துவமாய் படம் பிடிக்கும் அழகே தனி!
பணத்தாசை நிலத்தாசைப் பேய்பிடித்தோர்!
பலவீனம் சாடுகின்ற தாயுள்ளம் - இவர்
கலைத்தொண்டு யாழ் செய்த தவமாகும்.
சொல்வதிலே எளிமையுண்டு சொன்னதிலோ
சமுத்திரத்தின் ஆழமுண்டு! அதுதான் மகுடி!

-யாழ்.சுதாகர்-

சி.புரட்சிமணி, மட்டுநகர்.

❓ **நடுங்கும் பூமியிலும் குமுறும் எரிமலையிலும் கொந்தளிக்கும் கடலிலும் பயங்கரமானது எது?**

☛ ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையில் அமைதியாக இருக்கும் இடைவெளி.

செல்வி உமாபதி கந்தையா, திருகோணமலை.

❓ **தமிழினம் யாரை நம்பியிருக்கின்றது.**

☛ விண்வெளி நட்சத்திரங்களையும், வெண்திரை நட்சத்திரங்களையும்.

எம்.எம்.அக்பர், மட்டுநகர்.

❓ **நாட்டில் விபத்துக்கள் மலிவதற்குக் காரணம் என்ன?**

☛ சாரதி சாராய சுருதியில் கார் ஓட்டுவதும் ஒரு காரணம்.

# மகுடி பதில்கள்

தேவேந்திரன், ஹம்டன்லேன், கொழும்பு.


❓ **பிச்சை எடுப்பது அவமானமா?**

☛ உலகமே ஒரு பிச்சை மாநாடு. நோயாளி உயிரைப் பிச்சை கேட்கின்றான். அரசியல்வாதி வாக்குப் பிச்சை கேட்கின்றான். படித்தவன் உத்தியோகப் பிச்சை கேட்கின்றான். பக்தன் அருள்பிச்சை கேட்கின்றான்.

செல்வி விக்னேஸ்வரி நாகராசா, மானிப்பாய்.

❓ **அந்நிய நாட்டில் இரு தமிழர் சந்தித்தால்?**

☛ இரு தமிழர் சந்தித்தால் ஆங்கிலத்தில் பேசுவார்கள். இருபது தமிழர்கள் சந்தித்தால் தமிழ் மன்றம் அமைப்பார்கள்.



செல்வி மீனாட்சி தம்பிராசா, மீசாலை

❓ **பின்வாங்குபவனால் வாழ்க்கையில் முன்னேற முடியுமா?**

☛ பின் வாங்குபவனால் முன்னேற முடியும்.

செல்வி ராஜமலர் சிவபாலன், அச்சுவேலி.

❓ **விவசாயியின் மகன் சிகரெட் குடிக்கும் போது உமது மனதில் என்ன தோன்றுகின்றது?**

☛ உண்பதற்கு உலை வைக்க, உழைத்த பணத்தை உயிருக்கு உலை வைக்க ஊதித்தள்ளுகிறான் என்று நினைப்பேன்.

சி.நவரட்ணம், முல்லைத்தீவு.

❓ **தமிழ் அரசியல்வாதிகளுக்குள் ஒற்றுமை இல்லையே ஏன்?**

☛ பெண் குணமுள்ளவர்கள். நாலு பெண்கள் நாலு நிமிடம் ஒற்றுமையாக இருக்கமாட்டார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.முத்துராசா, வரணி.

❓ அன்று மனைவி சற்று ஏறுமாறாக நடந்தால் சன்னியாசம் செல்வான்.... இன்று?

☛ அன்னியநாடு செல்வான்.

இவ்விதழில் வெளியாகியுள்ள மகுடியார் பதில்கள் சிரித்திரன் ஆரம்பகால இதழ்களில் இருந்து மறுபிர சுரம் செய்யப்பட்டவை சிரிப்புக்கும் சிந்தனைக்கும் விருந்த ளிக்கும் மகுடியாரின் பதில்கள். காலமதை வென்று நிற்கும் கருத் துக்கள் கொண்டவை.

செல்வி சாரதா சிவபாதம், புத்தூர்.

❓ விளம்பர சாதனங்கள் சாத்தானையும், சான்றோ னெனப் பெரிது படுத்துகிறதே?

☛ குள்ளனை பூதக்கண்ணாடி பிடித்துக் காட்டினாலும் குள்ளன் குள்ளனேதான்.

ம.கந்தசாமி, புத்தூர்.

❓ பொய் என்பது என்ன, உண்மை என்பது என்ன?

☛ காதலன், வியாபாரி, அரசியல்வாதி, உண்மை பேசுவது பொய்- அவர்கள், பொய் பேசுவது உண்மை.

செல்வி. கனகேஸ்வரி தம்பையா.

❓ கியூ வரிசையை மதியாது முன்வந்து நிற்பவன் பற்றி உமது கருத்து?

☛ அவனின் மூளையை விட எறும்பின் மூளை மிக விசாலமானது. எறும்பு கியூவரிசை ஒழுங்கு தவறுவ தில்லை.

க.செந்திநாதன். தெல்லிப்பளை.

❓ அரசியல்வாதிகள் ஏன் பொது மக்களின் அறிவை வளர்ப்பதில் அக்கறை காட்டுவதில்லை?

☛ பொதுமக்களின் அறியாமைதான் அரசியல்வாதி களின் ஆதார சுருதி.

மு.செல்வசேகரன், பளை.

❓ ஏன் நம்மவர்கள் கலைஞர்களை இறந்த பின்பு மட்டும் பாராட்டுகிறார்கள்?

☛ உயிரோடு இருக்கும் போது வாழ்த்தினால் வளர்ந்து விடுவார்கள் என்ற பெறாமையில்.

செல்வி விஜயவாணி, வேலணை.


❓ நாம் பணம் தேடுவது மேலானதா அல்லது அறிவு தேடுவது மேலானதா?

☛ நாம் மூளையோடுதான் பிறந்தோம் அறிவு தேடுவதற்கு.. பணப்பையுடன் பிறவி எடுக்க வில்லையே பணம் தேடுவதற்கு.

ம.நாகராசா, கண்டி.

❓ கடையில் தூங்கினால்....?

☛ குத்துவிளக்கு முன் விழித்திருக்க வேண்டிவரும்.



க.சண்முகநாதன், கரவெட்டி.

❓ எது தீது?

☛ நிதி மீதியாக இருப்பதும் தீது, நீதி பாதியாக இருப்பதும் தீது.

மு.தங்கவடிவேல், வேலணை.

❓ உலகில் பெரும் ஏமாளி யார்?

☛ வேட்பாளரை எம்.பி. ஆக்கிவிட்டு அவருக்கு அடிமையாகும் வாக்காளன்.

ந.சிவஞானசுந்தரம், விசுவமடு.

❓ சோஷலிசம் இலங்கையில் வெற்றி பெறாததன் காரணம் என்ன?

☛ சொகுசுகள் "சோஷலிசம்" பேசியபடியால்.

தமிழ்ப்பிரியன், யாழ்ப்பாணம்.

❓ தமிழ் வாலிபர்களுக்கு அந்நிய நாடுகளில் தனி மதிப்பு இருப்பது ஏன்?

☛ தலையுள்ளவனைத் தலையுள்ளவனே வணங்கு வான்.

ம.செந்திநாதன், திருமலை.

❓ நாம் ஏன் தேர்தலின் போது வாக்குச்சீட்டுப் போடுகின்றோம்?

☛ ஜனநாயக வாத்து பொன்முட்டை போடுமென்று.

த.முத்துக்குமாரன், மட்டுநகர்.

❓ எது நன்றிகெட்ட செயல்?

☛ பாட்டாளிகளால் வாழவைக்கப்படும் உலகம், பாட்டாளிகளுக்குப் புரியா இலக்கியம் படைப்பது.

R.செல்வரட்ணம், கண்டி.

❓ பைத்தியக்காரனுக்கும் தமிழனுக்குமுள்ள வித்தியாசம் என்ன மகுடியாரே?

☛ பைத்தியக்காரன் யோசித்துக் கெட்டவன், தமிழன் பேசிக்கெட்டவன்.

ஸ்ரீ.விபுலன், சிவப்பிரகாசம் வீதி, யாழ்.

❓ இலக்கியங்கள் எப்படிப்பட்டதாக எழுதப்பட வேண்டும்?

☛ விமர்சகர்கள் எடைபோடுவதற்காக இலக்கியம் எழுதக்கூடாது, விவசாயிகள் எழுச்சியுற இலக்கியம் படைக்க வேண்டும்.

மகுடி பதில்கள் பகுதிக்கு கேள்விகளை அனுப்புவோர் கடித அட்டையில் கீழ்க்காணும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவும். சின்ன மகுடியார் பதில் தருவார்.

கேள்வி:.............................................


அனுப்புபவர் பெயர்: ..............................

முகவரி:.............................................

சின்ன மகுடியார் பதில்கள் ,
தபால் பெட்டி எண் : 149,
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையானவைகளிடையே மிகவும் சிறப்பான இடம் போக்குவரத்துக்கு உரியதாகின்றது. போக்குவரத்து சேத்திரம் தொடர்பாக முக்கியமான மாற்றங்கள் பல இந்நாட்டில் நிகழ்ந்துள்ளன. ஆங்கிலேயரின் நிர்வாக காலத்தில் ஆங்கிலேயர்களால் இங்கு புகைவண்டிச் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு முன் தபால்களும், பிரயாணிகளும் போக்குவரத்தின் பொருட்டு பயன்படுத்திய போக்குவரத்துச் சேவை குதிரைவண்டிகள்தான்.

கொழும்பு - கண்டி அரச குதிரைக்கோச்சி, கொழும்பு- கண்டி வியாபார குதிரைக் கோச்சி, காலி அரச விக்டோறியா குதிரைக் கோச்சி, கொழும்பு-நீர்கொழும்பு குதிரைக் கோச்சி மற்றும் கொழும்பு-இரத்தினபுரி குதிரைக்கோச்சி என்பன ஆங்கிலேய நிர்வாகத்தினால் முதல்தடவையாக இங்கு ஆரம்பிக்கப்பட்ட குதிரைக் கோச்சிச் சேவைகளாகும்.

குதிரை வண்டிகளின் சேவை முதல் தடவையாக இங்கு ஆரம்பிக்கப்பட்டது ஹோர்டன் தேசாதிபதியின் நிர்வாக காலத்திலேயே - அதாவது 1832இல்.

இதில் முதலாவதாக அமைந்தது கொழும்பிலிருந்து கண்டி

# குதிரைக் கோச்சி (வண்டி) பற்றி சில விபரங்கள்

வரையான குதிரைவண்டி மார்க்கம் மஹஹேன அல்லது அம்பேபுஸ்ஸ வரைக்கும் அமைந்தது. இந்த நாட்டுக்கு மாத்திரமல்ல, முழு ஆசியாவிலுமேயே முதலாவது குதிரைவண்டிச் சேவையாக இது அமைந்தது. ஐந்து மாதங்களுக்குள் அந்தச் சேவை கண்டி வரை நீட்டப்பட்டது. முதலில் அது போக்குவரத்துச் செய்தது வாரத்திற்கு மூன்று தடவைகள் மாத்திரமே. பின்னர் தினசரிச் சேவையாக அது அமைக்கப்பட்டது.

இதில் கொழும்பிலிருந்து கண்டி வரை செல்வதற்கு எடுக்கப்பட்ட காலம் 14 மணித்தியாலங்கள். திரும்பிவரும் பயணத்திற்கு 12 மணித்தியாலங்கள் எடுக்கப்பட்டது. கொழும்பு - கண்டி குதிரைவண்டி மார்க்கத்தில் முக்கிய நிறுத்த இடமாக மஹஹேன அமைந்தது. மஹர, ஹெனரத்கொட (தற்போதய கம்பஹா) உத்துவன்கந்த ஆகியன இந்த வழியில் முக்கிய நிறுத்தும் இடங்களில் சிலவாகும். கொழும்பிலிருந்து கண்டிக்குக் கட்டணம் 2½ பென்சாக அமைந்தது.

ஆங்கிலேயரின் நிர்வாகத்தின் மீது குரோதம் ஏற்பட்ட பின்பு உத்துவன் கந்தவில் வைத்து சரதியேல் என்பவன் பல தடவைகள் இந்தக் குதிரை வண்டியைத் திருப்பி அனுப்பியதாக பழைய அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

1867இல் மலைநாட்டுப் புகையிரதம் முதல் பயணத்தை ஆரம்பிக்கும் வரை கொழும்புக்கும், கண்டிக்கும் இடையில் தபால் மற்றும் பிரயாணிகளின் பயணம் நிகழ்ந்தது குதிரை வண்டியின் மூலமே.

குதிரைவண்டிச் சேவையை இந்த நாட்டில் நடத்திச் சென்றது ஐரோப்பிய வர்த்தக அமைப்பாகும். ஐம்பது பவுண் கொண்ட நாற்பது பங்கு அடங்கிய மூலதனத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்த வர்த்தகத்தில் 5½ பங்குகள் மாத்திரமே இலங்கையருக்குச் சொந்தமாக அமைந்தது. இந்த வர்த்தகத்தில் 6 பங்குகளுக்கு உரிமையாளராக தேசாதிபதி திகழ்ந்தார்.

புகையிரத வழி திறக்கப்பட்ட பின்பு குதிரைவண்டிச் சேவையை நிறுத்துவதற்கான முற்றுப்புள்ளி வைத்தாலும், தீவின் முக்கிய நகரங்களைத் தொடர்புபடுத்தும் மிகப்பெரிய வழிகளைக் கட்டியெழுப்பி குதிரைவண்டிச் சேவை அரசின் மூலம் மிகவும் நல்ல நிலவரத்தில் வந்து கொண்டிருந்தது. அவிஸாவளை- இரத்தினபுரி - பலாங்கொடை சேவை, பெல்மதுள்ள- றக்வானை சேவை, நீர்கொழும்பு-புத்தளம் சேவை, யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை சேவை, மாத்தறை-ஹம்பாந்தோட்டை சேவை, மாத்தறை -தெனியாய சேவை, தலவாக்கலை- அக்கரைப்பத்தனை சேவை என்பன இவற்றுள் சிலவாகும்.

ஆரம்ப காலத்தில் இந்த நாட்டின் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டது, ஒற்றைக் குதிரை பாவிக்கப்பட்ட குதிரை வண்டிச் சேவையாகும். ஆனால, இந்தச் சேவையை மிகவும் செயற்றிறன் கொணடதாக அமைக்கும் நோக்கில் பின்பு இரண்டு குதிரைகள் ஈடுபடுத்தப்பட்டன. இருந்தும், ஆங்கிலேய நிர்வாகத்தினரால் மலைநாட்டுப் பிரதேசங்களில் தேயிலைப் பயிர்ச் செய்கையும், தாழ்ந்த பிரதேசங்களில் தென்னைப் பயிர்ச் செய்கையும் வர்த்தக மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பின்பு அதன் அறுவடைகளை கொழும்பிற்குக் கொண்டு செல்வதற்கு குதிரைவண்டிச் சேவையின் செயற்றிறன் குறிப்பிடத்தக்கதாக அமையவில்லை. ஆகையால் புகையிரத சேவை இங்கு ஆரம்பிக்கப்பட்டதோடு குதிரைவண்டிச் சேவை நிறுத்தப்பட்டது. ●

-வல்வையூரான்-







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர் சிறப்பு



ஒருவர் : எங்கட சனத்தின்ர
செய்கையால ஐரோப்பா
நாறுதாம்!
மற்றவர்: ஓம், ஓம் எங்கட சனத்தின்ர
செய்கையால ஐரோப்பா
நாறும். எங்கட சனம்
ஐரோப்பாவைவிட்டு
போனால்... இங்க கிளீனிங்
வேலைக்கு ஆள் இல்லாமல்
ஐரோப்பா நாறும்.

-ரவிசெல்லத்துரை



கண்ணன் : உலகிலேயே தமிழர்கள்
குறைவாக வாழும் நாடு
எது?
குமார்: இதில் என்ன சந்தேகம், நம்ம
ஸ்ரீ லங்கா தான்!

-கலையழகன்



ஒருவர் : லண்டன் மாப்பிள்ளை ஏன்
எரிஞ்சு எரிஞ்சு விழுகிறார்?
மற்றவர்: அவர் எரிபொருள் விற்பனை
நிலையத்தில் வேலை
செய்கிறார். அது தான் எரிஞ்சு
எரிஞ்சு விழுகிறார்.

-ரவிசெல்லத்துரை



ஷீலா : ஏய்....அங்கே பார்,
இந்தக் கோரமான
முகத்தை வரைந்த
ஓவியன் யார்?
ஸ்டெலா : சரியாகப் பார். அது
படம் இல்லை, முகம் பார்க்கும்
கண்ணாடி.




ஒருவர் : எங்கட சுந்தரம்
சீட்டுப்பிடித்தான்
நட்டப்பட்டான், உண்டியல்
நடத்தினான் நட்டப்பட் டான்,
கடைபோட்டான்
நட்டப்பட்டான்.
மற்றவர்: இப்ப நல்ல பிஸ்னஸ்
நடக்குதாம்.
அப்படியெண்டால்
என்ன பிஸினஸ் செய்கிறான்?
ஒருவர்: கடைக்குள்ள உண்டியலை
வைச்சு கடையைக்
கோயிலாக்கிப்
போட்டானாம்.

-ரவிசெல்லத்துரை



ஒருவர் : என்ன சோமண்ண! தாயின்ர
செத்த வீட்டில மூத்தமகன்
சுந்தரத்தைக்
காணக்கிடைக்கல...
மற்றவர்: வட்டிக்காசு வாங்கப் போனவர்
வரச் சுணங்கிட்டுதாம்!
ஒருவர்: ???!!!

-கலையழகன்



ஜோ: ஏய்... நான் இன்னும் சாகவில்லை.
ஜான்: பொய் சொல்லாதே டாக்டர் நீ
இறந்துபோய்விட்டதாகச்
சொல்லிவிட்டார்.

ஜோ : நான் சொல்கிறேன், நான் இன்னும் சாக
வில்லை
ஜான் : பேசாமல் வாயை மூடிக்கொண்டு படு. டாக்டர்
பொய் சொல்லமாட்டார்.

நன்றி: இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லைமண்

எஸ். விஜி

'ம்......அப்பாடா......'

சன நெரிசலில் ஒற்றைக்காலில் தவம் செய்து வந்த பயணத்திலிருந்து விடுபட்டதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியை வாய் வெளிப்படுத்த அந்த மினிபஸ்ஸில் இருந்து இறங்கி ஊர் மண்ணை மிதித்தேன். அதென்னவோ எப்பொழுது வந்தாலும் இந்த மண்ணை - நான் பிறந்த மண்ணை மிதிக்கும் போது ஏற்படும் பரவசம் இருக்கிறதே....ம் ஹூம்.... அதைச் சொல்ல வார்த்தைகளை இலகுவாகத் தேடிப் பெற முடியாதுள்ளது. அப்படி ஒரு பரவச நிலை, எப்பொழுது ஊருக்கு வந்தாலும் எனக்கு ஏற்படுவதுண்டு. இதோ, இப்பொழுது கூடத்தான் மனமும் உடலும் இலேசாகி, இளமை திரும்பியது போன்ற ஒரு உணர்வு. பயணப்பையைத் தோளில் மாட்டிக் கொண்டு, முழுமையாகத் தெரியாத ஒரு பாடலை முணு முணுத்தபடி துள்ளிக் குதித்து வீதியின் ஓரத்தில் கிடந்த அந்தச் சிறிய கல்லை வலது காலால் உதைத்துத்தள்ளிவிட்டு வீட்டை நோக்கி வேகமாக நடக்கின்றேன்.

எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்ந்த குடும்பம். ஏழ்மைதான் ஆனாலும் இனிமையான வாழ்க்கை. பள்ளிப்படிப்பு, கோயிலடி விளையாட்டு, மாலை நேரம் வயல் வரம்பில் மாட்டுக்குப் புல் அறுத்தல், ஆற்றிலே நீச்சல், இரவில் மேசை விளக்கினைச் சுற்றிவர தரையில் இருந்து படிப்பு.... இவைதான் வழமையான எமது வாழ்க்கை வட்டம். ரியூட்டறியை அறியாமலேயே பல்கலைக்கழகப் படியேறியவர்கள் நாங்கள். பள்ளிக்கூடம்தான் கோயில். ஆசிரியர்கள்தான் தெய்வம், அவர்களது வாய்மொழி வார்த்தைகள் தான் எமக்கு வேதவாக்கு...ம்.... அந்தப் பொற்காலம்



எமது கிராமத்தில் வயது முதிர்ந்து விட்ட நோயாளியைப் போல, இன்றும் உயிருடன் இருப்பதில் எனக்குப் பெருமைதான். இருந்தும் என்ன, இந்த நாட்டிலே தமிழன் எங்கேதான் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வழ அனுமதிக்கப்படுகின்றான்? எப்படித்தான் அன்பாகவும், நட்புடனும் நாங்கள் அவர்களுடன் வாழ்ந்தாலும் இடையிடையே அவர்களிடம் ஏற்படும் அந்த உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள், எமது உணர்வை, உடமையை, ஏன் உயிரைக் கூட அழித்து, மிதித்து, துவம்சம் செய்துவிட்டுப்போவதுதானே இதுகாலம் வரையான வரலாறாக இருக்கின்றது. நாங்களும் இந்த ஊரில் எத்தனை தடவைகள் அழிந்து, அழிந்து எழுந்து நிற்கின்றோம். இது எல்லை மண் அல்லவா? இந்த ஒரு உணர்வுதானே பல உறவுகளை எரி கொடுத்தும், பறிகொடுத்தும் இன்னும், இன்னும் இங்கேயே எங்களை வாழவைக்கிறது. அப்பா, சித்தப்பா, அக்கா, சித்தி, தம்பி என்று எத்தனை உயிர்களை இனவெறிக்கு இரை கொடுத்திருக்கின்றோம்? இருந்தும் இந்த மண்ணின் புழுதி மணத்துக்கும் கூட ஒரு மகிமைஇருக்கிறது. அதனால் தான் உயிரைக் காப்பாற்றுவதற்காக அகதி என்ற பெயருடன் எந்த இடத்தில் குந்தி எழும்பினாலும் இந்தப் புழுதி மணம் தரும் அந்த உணர்வை எந்த மண்ணும் இதுவரை தந்ததில்லை. அதை உணர்ந்து தானோ என்னவோ எங்களை எல்லாம் எங்காவது போய் உயிர்தப்பி வாழுங்கோ என்று துரத்திவிட்டு அம்மா மட்டும் சித்தியுடன் இன்னும் இந்த மண்ணிலேயே இருக்கிறார். எத்தனை தடவைகள் எங்களோடு வந்துவிடுங்கோ எனக் கூப்பிட்டும் அவர் மறுத்து விட்டார். அவர் உயிர் இங்கேதான் பிரிய வேண்டுமாம். தனது உடல் இந்த மண்ணில் தான் புதைக்கப்பட வேண்டுமாம். அப்படி ஒருபிடி வாதம். அந்தப் பிடிவாதத்தின் விளைவுதான் இதோ பதினான்கு வருடத்துக்குப் பிறகு நானும் அம்மாவுடன் ஒரு வாரம் தங்கி இருந்து விட்டுப்பிறகு போகும் ஆவலுடன் ஊர் வருகின்றேன்.

'ஆரிது....?..... ராசனா?

வெளிறிய சந்தன நிறத்திலான ஒரு சேலையைச் சுற்றிய உடம்புடன் ஒரு உருவம் என்னிடம் கேட்கிறது. நான் நடப்பதை நிறுத்தி, அந்த உருவத்தை ஏறிட்டுப்பார்க்கின்றேன். அந்த முகம்.... அந்த முகம்.....? தவமணி அக்காவா? கைகள் மெலிந்து குச்சிபோல் தொங்க, வாழ்க்கையின் அனுபவங்கள் முழுவதையும் இயற்கை அவரது முகத்திலேயே கோடுகளால் தீட்டியிருக்க... என் முன் நிற்பது தவமணி அக்காவா?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்ஓம், அவ தான், அவவேதான். கண்களில் தெரியும் அந்தக் கூரியபார்வை.... அது ஒன்றே அவரை உறுதிப்படுத்துமாப்போல் இருக்கிறது. இருந்தும்...

'நீங்க..., நான் வார்த்தையை மென்று விழுங்கினேன். அடையாளம் மறந்து போனதனால் ஏற்பட்ட வேதனையை மறைத்த படி

'தம்பி....... நீ கனகத்தோட மூத்த மகன் ராசன் தானே?'

'ஓம்... நீங்க......?'

'டேய் என்ர ராசா என்னைத் தெரியல்லையா குஞ்சு? நான் தான் தவமணி'

நான் சாட்டையடி விழுந்தது போல் அடித்து விடுகின்றேன். தவமணி அக்கா... எங்கள் தவமணி அக்காவா இது? பதினான்கு வருடங்களுக்குள் இப்படி ஒரு முதுமையா? உண்மைதான், வேதனைகளே வாழ்க்கையாகும் போது இவைதான் எஞ்சி நிற்கும் போலும். நெஞ்சுக் கூட்டுக்குள்ளே ஏதோ ஒன்று பிசைய, கண்களில் கண்ணீர் நிறைகிறது.

'என்னக்கா இது கோலம்? என்னால நம்பவே ஏலாமல் கிடக்கு, நீங்க இப்பிடி எண்டா, எங்கட அம்மா எப்படி இருப்பா..?....' நான் முடிக்கவில்லை.

'அவளுக்கென்ன மகன் அவள் சீதேவி. ஏன் எனக்கென்ன மகன்? நான் நல்லாத்தானே இருக்கிறன். அது கிடக்கட்டும் கொம்மா வீட்டில இல்லப் போ்ல கிடக்கு, நேற்று முந்தநாளா நான் அவவக் கோயிலடியில காணக்கிடைக்கல்ல. ஒரு வேள எங்கயும் போட்டாவோ தெரியாது. ஏன் நீ வரப்போறத அறிவிக்கல்லயே?' தவமணி அக்கா சந்தேகமாய்க் கேட்கின்றார்.

'இல்லை அக்கா இப்ப பிரச்சனை இல்லத்தானே அதுதான் திடீரெண்டு வெளிக்கிட்டு வந்தனான்' எனது குரலில் சிறிது மாற்றத்தை நானே உணருகின்றேன்.

'சரி மகன் பூவாலுட வயலில புல்லுப்பிடுங்கிறம். இப்ப இவன் ரஞ்சித்திட கடையில சீனி வாங்க வந்தனான். சுணங்கப்போகுது, சீனி வாங்கிக் குடுத்துப்போட்டு அதால போகக்குள்ள ஒருக்கா வீட்ட வாறன். ஆறுதலாக் கதைப்பம் என்ன? போ மகன். நீ கவனமாப் போ அப்பன்....' கூறியபடியே தவமணி அக்கா என்னைக் கடக்கிறார்.




தவமணி அக்கா தனக்கு இளமையான எவரையும் மகன், மகள் என்று தான் அழைத்துக் கதைப்பார். அவரது மூத்த மகனுக்கும் எனக்கும் ஒரே வயது தான். இப்ப ஒரு பத்து வருஷத்துக்கு முந்தி, ஒரு இரவு வயலில் சூடடித்துக் கொண்டிருந்த ஆறுபேரை இராணுவம் இரவோடிரவாகக் கொண்டு போனது. அதற்குப் பிறகு அவர்களை யாரும் எங்கும் காணவில்லை. அந்த ஆறு பேரில் தவமணி அக்காவின் கணவரும் இரு பிள்ளைகளும் அடங்குவர். ஆரம்பத்தில் தவமணி அக்காவும் எத்தனையோ இடங்களுக்கு ஏறி, இறங்கி யார் யாருடைய காலிலெல்லாம் விழுந்து கதறிப் பார்த்தா. பிறகு மெல்ல வலியை அடக்கிக் கொண்டு வாழ்ந்து வருகிறார்.இழப்பை அனுபவித்தவர்களுக்குத் தானே அதன் வலியும், கனமும் புரியும். தவமணி அக்காவைப் பொறுத்தவரை இப்போ தான் உழைத்து தனது வயிற்றை நிரப்ப வேண்டிய நிலை.




தவமணி அக்காவின் நினைவுடனேயே நடந்தது தூரம் தெரியவில்லை. படலையைத் தள்ளியபடி வளவினுள் கால் வைக்கிறேன். பழைய படலை சற்று சத்தமாகவே கிறீச்சிடுகிறது. படலைச் சத்தம் கேட்டு சித்தி எட்டிப் பார்க்கிறார்.

'ஆர் இது?...... ராசனா?... என்ர மகனே! வா...குஞ்சு வா... என்ர புள்ளயக்கண்டு எத்தின வருஷமாச்சு. அறுவாங்கலாள அலக்கழிஞ்சு போன புள்ள என்ன மாதிரிக் கேவலமாய்ப் போயிற்றான். வா.. அப்பன் வா... என்ன தனியாவா வந்தனீ மகன்? புள்ளையளைக் கூட்டி வரல்லையா? பல வருடங்களாகப் பார்க்காத ஏக்கம் சித்தியினது சொற்களில் பிணைந்திருக்கின்றது. நான் மௌனமாக தலையை ஆட்டியபடி கீழ் உதட்டைப் பற்களால் கடித்து உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முயல்கின்றேன். கண்களில் நிறைந்த கண்ணீர் பார்வையை மறைக்கின்றது. செருப்பைக் கழட்டி ஓரமாகத் தள்ளிவிட்டபடி குனிந்து வீட்டினுள் நுழைகிறேன். பயணப் பையை சுவர் ஓரமாக வைத்து விட்டு, கைகளால் முகத்தைத் துடைப்பதாய்க் காட்டியபடி கண்ணீரைத் துடைத்தெறிகின்றேன்.




'எப்படி சித்தி சுகமா இருக்கிறீங்களா? ' எனது குரலில் தளம்பல் இருப்பதை என்னால் உணரமுடிகிறது.

'எனக்கென்ன மகன். நான் சுகமாத்தான் இருக்கிறன். ஏன் தனிய வந்தனீ? இது என்ன கேவலம்? ஏன் வேளா வேளைக்கு சாப்பிடுறதில்லையா?' கேட்டபடி சித்தி பாயை எடுத்து விரித்துப் போடுகிறார். முற்றத்திலே குடை போல் பரந்திருக்கும் வேப்பமரத்தின் நிழல் வீட்டைக் குழுமையாக்கி வைத்திருக்கின்றது. கைகளை நீட்டி சுவரைத் தடவியபடி ஆழமாக சுவாசிக்கின்றேன். இது எனது வீடு. எமது வீடு. அம்மா தந்த பாசத்தை விட இதன் நிழல் தந்த பாசம் அதிகம். இதன் சுவர்மீது சாய்ந்து கண்களை மூடி, கால்களை நீட்டி, கொஞ்ச நேரம் அமைதியாய் இருந்தாலே போதும், உடலுக்கும், மனதுக்கும் புது வலிமை வந்தது போல் ஒரு உணர்வு. இதோ இப்பொழுது கூட இதனை நான் தடவும் போது, அப்பா என்னைத் தடவுவது போல் இருக்கிறது. இந்தப் பதினான்கு வருட இடைவெளிக்குள் வீட்டில் மாற்றம் எதுவுமே ஏற்படவில்லை. மாற்றங்களை என்னால் கண்டு கொள்ள முடியவில்லை. சுவாமி படங்கள், குழந்தைகளது படங்கள், இயற்கைக் காட்சிகளது படங்கள் தூக்கியிருந்த இடங்களிலேயே தொங்குகின்றன. வைத்த பொருள், வைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில், வைத்த மாதிரி இருக்க வேண்டும் என்பதில் அப்பா கண்டிப்பானவர். அதுதான் அவர் இல்லாத போதிலும் வீட்டின் ஒழுங்கமைப்பில் மாற்றத்தைக் காணமுடியவில்லை. எல்லாமே சரி, "அம்மா எங்கே? எண்ணங்கள் திரண்டு வார்த்தைகளாக வந்து விழ முன்,

'சரி,சரி உடுப்ப மாத்திற்று கை காலக் கழுவன் தம்பி. சாப்பாடு போடுறன். காலம நேரத்தோட வெளிக்கிட்டிருப்பாய்...' கேட்டபடி சித்தி எனது முகத்தைப் பார்க்கிறார்.

'இல்ல இப்ப வேணாம் சித்தி. சுணங்கட்டும். அது சரி அம்மா எங்க? காணல்ல' ஆவலை அடக்க முடியாது கேட்டு விடுகின்றேன்.

'அக்கா இஞ்ச இல்ல மகன். அவ முந்தநாளே மட்டக்களப்புக்குப் போயிற்றா. இன்னும் இரண்டு மூணு நாள் கழிச்சுத்தான் வருவா'

எனக்கு அதிர்ச்சியாய் இருக்கிறது. பதினான்கு வருடங்களுக்குப் பிறகு எவ்வளவு எதிர்பார்ப்புக்கள். ஆசைகளுடன், நூற்றைம்பது இருநூறு கிலோ மீற்றர் கடந்து அம்மாவைப் பார்க்க வந்தால்...? ஏமாற்றம், கவலை, வேதனை, இவை எல்லாம் கலந்த உணர்ச்சிக்குவியலின் வெளிப்பாடாக........ ஏன்..?' வார்த்தைகள் பலமிழந்து வந்து விழுகின்றது. இதற்கு மேல் வார்த்தைகளைக் கோர்வையாக்க முடியவில்லை.

'அது மகன் மட்டக்களப்பில தொண்ணூறாம் ஆண்டு யாரோ ஒருவன ஆமி புடிச்சுக் கொண்டு போய் காட்டுக்குள்ள இருக்கிற தங்கட முகாமில வைச்சு வேலை வாங்கியிருக்கிறானுகள். அவன் இப்ப கிட்டடியில தப்பி ஓடி வந்து ஊருல சேந்திட்டானாம். தன்ன அடைச்சு வைச்சிருக்கும் கேம்பில தன்னோட கன தமிழாக்களை வைச்சிருந்தது எண்டு அவன் சொன்னவனாம். அதுகளெல்லாம் பேப்பரிலையும் வந்தது தானே. நீ பார்த்திருப்பாய் தானே மகன்? அவன் வந்த பிறகு உங்கட அப்பாட போட்டோ ஒண்னடயும் எடுத்துக் கொண்டு போன




மாதமும் ஒருக்கா அக்கா போனவ. மூண்டு நாள் நிண்டும் அந்தப் பொடியன சந்திக்க ஏலாமப் போயிற்று எண்டுட்டு வந்திற்றா. அப்ப அக்கா அங்க நிக்கைக்குள்ள ஆரோ சாத்திரி சொன்னதாம் எண்டு உங்கட பெரியப்பா அம்மாவுக்கு கடிதம் போட்டிருந்தவர். அது தான் உங்கட அப்பாட பேரில மாமாங்கத்துக்கு நேத்திக்கடனுக்கு ஒரு பசு



மாட்ட வாங்கி விட்டுட்டா. அதோட அந்த் மாட்டப் பாக்குறதுக்கு ஒருவன மாசச் சம்பளத்துக்கும் வைச்சுப் போட்டு வந்திற்றா. அதுதான் முந்தநாள் அவனுக்கு சம்பளம் கொடுத்துப் போட்டு அந்தப் பொடியன சந்திக்க

ஏலுமெண்டா சந்திச்சு உங்கட அப்பாவப் பற்றியும் விசாரித்து வருவம் எண்டு தான் போனவ' சித்தி ஏற்ற இறக்கங்களுடன் கூறி முடிக்கின்றார். அவரது பேச்சுத் தொனியிலும் பக்தி உணர்வு மிகுந்திருப்பதாகவே எனக்குத் தெரிகிறது.

தொண்ணூறாம் ஆண்டு யூன் மாதம் எமது கிராமம் வேட்டையாடப்பட்ட போது அள்ளிக்கொண்டு போகப்பட்டவர்களில் அப்பாவும் ஒருவர். அறுபத்திரண்டு வயதிலும் எங்கள் ஊர் கோயில் பொறுப்பை ஒழுங்காக நிறைவேற்றி வந்தவர். தவமணி அக்காவைப் போல நாங்களும் இரவு பகல் பாராது அப்பாவைத் தேடினாலும் விளைவு பூச்சியமாகவே இருந்தது. கொண்டு போனவர்களது முகாம்களுக்குப் போய் முள்ளுக் கம்பிகளின் முன்னே நின்று, மொழி தெரியாத முகங்களைப் பார்த்து அழுது திரும்பியதுதான் மிச்சம். ஒவ்வொரு முகாமாக தவம்கிடந்து களைத்துவிட்டோம். இப்போது நானோ, தம்பியோ அப்பாவைத் தேடுவதைக் கைவிட்டுவிட்டோம். ஆனால் அம்மா...? இன்று கூட கோயில்களுக்கும், சாத்திரக் காரர்களுக்கும் செலவுகளைச் செய்து

வருவதை நாங்கள் தடுக்கவில்லை. அவரது மன அமைதிக்காக அந்த செயற்பாடுகளை அப்படியே விட்டுவிட்டோம். அது இப்போ கோயிலுக்காக மாடு வாங்கி விட்டு அதனைப்பார்க்க மாதச் சம்பளத்துக்கு ஆளை நியமிக்கும் அளவு வரை வந்துநிற்கிறது.

'என்ன ராசன் யோசிக்கிறாய்? சாப்பிடச் சுணங்கும் எண்டா மல்லித் தண்ணி ஒண்டு போட்டுத்தரவா? களைச்சு வந்திருக்கிறாய்' சித்தியின் குரல் எனது சிந்தனையைத் தடை செய்கிறது. "ம்.... தாங்க..." எனது பதிலோடு சித்தி குசினியினுள் நுழைகிறார் சித்தி, அம்மாவின் கடைசித் தங்கை. திருமணமாகி மூன்று வருடங்கள் கூட முழுமையாக வாழவில்லை. எழுபத்தி ஏழில் மூண்ட இனக் கலவர நெருப்பில் காடையர்களால் சித்தப்பா அடித்துக் கொல்லப்பட்டதுடன் அவரது தோளில் கிடந்த ஒரு வயதே ஆன மகனைக் கத்தியால் குத்தி, குத்திய கத்தியுடனே பிள்ளையையும்,



கணவனையும் பற்றி எரியும் வீட்டின் மேல் தூக்கிப் போட்டுவிட்டுப் போனதை ஒளித்து நின்று பார்த்தவதான், தொடர்ந்து கொஞ்சக்காலம் பிரமை பிடித்தவர் போல் இருந்தார். இப்போது தேறி விட்டார் போல் தெரிகிறது. இருந்தும் இடையிடையே என்னிடமோ தம்பியிடமோ 'ஒண்டு மட்டும் சொல்லுறன் மகன் நீ இருந்துபார். என்ர புள்ளய புருஷன கொண்டு நெருப்பில போட்டவனுக்கு ஒரு முடிவு வாரதைக் காணுமட்டும் நான் படுக்கையில விழமாட்டன். ஒ...' என்று கூறிக் கொள்ளுவார். சில வேளை அவரது அந்த மன உறுதிதான் இன்றும் கூட திடகாத்திரமாக நடமாடித் திரிவதற்குக் காரணமாக இருக்கலாம் போலும். எப்படி இருந்தாலும் நாங்கள் பிறந்த ஊரைவிட்டு அகதியாகப் புறப்பட்ட பிறகு அம்மாவுக்கு அவவும், அவவுக்கு அம்மாவுமே துணையாக இருக்கின்றனர். சோகத்துக்கு சோகம் துணையாக இருக்கிறது.

'இந்தா தம்பி புடி' சித்தி மல்லித் தண்ணியை நீட்டுகிறார். நான் இங்கே குடிக்கும் மல்லித்தண்ணிக்கு ஒரு தனி மகிமை உண்டு. எப்படித்தான் களைப்புடன் வந்தாலும் ஒரு கோப்பை மல்லித் தண்ணி குடித்தால் போதும். களைப்பு பறந்துதோடிவிடும். மல்லித்தண்ணியைத் தந்து விட்டு சித்தி மீண்டும் குசினியினுள் செல்ல நான் மெல்ல எழுந்து சாமி அறையை எட்டிப் பார்க்கின்றேன். காலமாற்றத்தின் விளைவு எதனையுமே காணமுடியவில்லை. சாமித்தட்டில் படங்கள் அழகாக துடைத்து வரிசையாக வைக்கப்பட்டிருக்கிறன. குத்துவிளக்கு மெல்லியதாக எரிந்து கொண்டிருக்கிறது. அப்பாவினது அந்தப் பெரிய இரும்புப் பெட்டி மூலையின் ஒரு பகுதியில் தூசுதட்டி சுத்தமாக காணப்படுகிறது. அப்பாவினது கணக்குக் கொப்பிகள், வேட்டி சட்டைகள் என்பன அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அப்பா படுத்துறங்கும் பாய், 'பாய் அசையில் ' சுருட்டி வைக்கப்பட்டி ருக்கின்றது. ஒ... பதினான்கு வருடங்களாக இவை இப்படியேதான் பேணப்படுகிறதோ? இவை கூட அப்பாவின் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனவோ? அம்மாவைப் போல..?

அம்மாவின் நினைப்பு வந்ததும் அவரை இன்று எப்படியாவது சந்திக்க வேண்டும் என்ற ஒரு வெறி ஏற்படுகிறது. பதினான்கு வருடத்தின் பின் எனது ஊரையும் உறவுகளையும் அம்மாவையும் பார்த்து, இருந்து தவழ்ந்து உண்டு மகிழ்ந்து களிக்க எண்ணிய எண்ணங்கள் இப்போ ஒன்றன் பின் ஒன்றாக மீண்டெழுந்து வந்து கேலியாச் சிரிப்பது போல் இருக்கிறது. இல்லைஅம்மாவைக் காண வேண்டும் அதுவும் இன்றே காண வேண்டும்.

'என்ன மகன் இன்னும் உடுப்புக் கூட மாத்தாம நிண்டு யோசிக்கிறாய்? அம்மா எங்கயாம்? சத்தம் கேட்டு வாசலைப் பார்க்கின்றேன். தவமணி அக்கா வாசலில் நிற்கிறார்.

'அம்மா மட்டக்களப்புக்காம்.. நீங்க வாங்க அக்கா..' நான் சோர்வோடு அழைக்கின்றேன்.

'வெள்ளிக்கிழமை கோயிலில கண்டனான் கொம்மா ஒண்டும் சொல்லல்ல..ம்.. அவளும் என்னதான் செய்வாள்தம்பி. அவளுககு எப்பவும் கொப்பற்ர யோசனைதான். அவரை என்ன செய்தானுகளோ? எங்க வைச்சிருக்கிறானுகளோ? எண்டுதான் ஒரே யோசனை அவளுக்கு. நீங்களும் ஆம்பிளப்பிள்ளையள் ஊரில இருக்கேலா தெண்ட நிலை. அவளும் என்ன செய் வாள்? வீட்ட, இந்த மண்ண விட்டுப் போட்டு தான் விலக மாட்டேன் எண்ட பிடி வாதம்..ம்' பெருமூச்சு விட்ட தவ மணி அக்கா மீண்டும் ஆரம்பித்தார். அதுவும் பிழையெண்டு சொல்ல ஏலாது தம்பி. காலத்துக்கு காலம் இங்க நடக்கிற அழிவுகளுக்கு பயந்து ஊரவிட்டுப் போனா, நாளைக்கு இந்த மண் எங்கட மண் எண்டு எப்படிச் சொல்லுறது? சாகிறதுதான், எண்டைக்கெண்டாலும் எல்லாரும் சாகிறதுதான். அதுக்காக உயிரைக் காப்பாத்துறக்காக இந்த மண்ண இழக்கேலுமா தம்பி? இதுதான் என்ர பிடிவாதம். என்னைப் போலத்தான் கொம்மாவும். எண்டைக்கோ ஒரு நாளைக்கு சாகிறதுதான். ஆனா அந்தச் சாவு பிறந்த இந்த மண்ணிலதான் தம்பி. அது மட்டும் இந்த உடம்பும், இந்தக் கைக ளும் பசியோட வந்து போற அந்தக் குஞ் சுகளுக்கு சாப்பாடு போட்டுக் கொண்டே இருக்கும். அந்த ஒரு கடமை தான் தம்பி என்ர மனிசனையும் புள்ளயளையும் கொண்டு போனவனுகள பழிவாங்க என்னால செய்யக்கூடியதாயிருக்கு. சரி நான் வாறன் எங்க உங்கட சித்தி? அவளும் எங்களைப் போலத் தானே? இதுக்கெல்லாம் ஒரு விடிவு நிச்சயம் ராசா' தவமணி அக்கா நடக்கிறார். மெலிந்து போய்விட்ட அந்த உருவத்தின் நடையில் ஒரு உறுதியும் தெளிவும் தெரிகிறது. மீண்டும் ஒரு தடவை தவமணி அக்காவிடம் சாட்டையடிபட்ட உணர்வில் நான் கூனிப்போகின்றேன். பயணப்பையைத் திறந்து நல்லெண் ணைக் கேனையும், வாழைப்பழச் சீப் பையும், மிக்ஷர் பக்கேற்றையும் எடுத்து மேசை மேல் வைக்கிறேன். மீண்டும் பயணப்பையை மூடி தூக்கித் தோளில் போட்டுக்கொள்கின்றேன். வெளியே வந்து செருப்பை மாட்டியபடி சத்தமாக 'சித்தி நான் மட்டக்களப்புக்கு போய் அம்மாவைப் பார்த்திட்டு அப்படியே யாழ்ப்பாணம் போகப்போறன். அடுத்த தவணை லீவுக்கு புள்ளையள கூட்டிக் கொண்டு கட்டாயம் வாறன்'. கூறிவிட்டு பதிலை எதிர்பாராது விறு விறு என நடக்கத் தொடங்குகின்றேன். நின்றால் நான் அழுவதை சித்தி கண்டு விடு வாவோ என்று பயம். எப்படியாவது பஸ்ஸையோ, லொறியையோ பிடித்து மட்டக்களப்பு சென்று அம்மாவைச் சந்திக்க வேண்டும். இதுவே எனது ஒரே சிந்தனையாக உள்ளது. நடை வேகம் எடுக்கிறது. தூரத்தே தெரியும் பஸ் தரிப்பு நிலையத்தை கண்ணீர் மறைக்கிறது.

●



● தம்பி இந்தப் பாதையால போகலாமா....?, மிதிவெடிகள் இல்லையோ.....?

■ அவ்வளவு பெர்சாய் இல்லைப் போகலாம்............!

## பாணபத்திரன் பகிடிகள்



ஆசிரியர் :- ஈராக்கின் ஜனாதிபதி யார்?



மாணவன் : ஜோர்ஜ் புஸ் சேர்

ஆசிரியர் : வெறி குட் சிற்டவுண்.



ஒருவர் :- என்ன கொடுமையப்பா இது. பக்கத்துவீட்டு வாலிபனுக்கு நீலக்குழந்தை பிறந்திருக்கே.....

மற்றவர் :- நீங்கள் ஒண்ணு.....

அந்த வாலிபன் நீலப்படம் விற்றுச் சம்பாத்தியம் செய்தவராம்.

ஒருவர் :- ??




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கற்பனை உரையாடல்

# நாங்கள் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறோம்

பு.கணேசராஜா



**குறிப்பு:**

*(வேலைதேடும் பட்டதாரிகள் அரச செயலகத்தை முற்றுகை யிட்டுள்ளனர். தமக்கு அரச நியமனம் வழங்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து அவர்கள் மறியலில் ஈடுபட்டுள்ளனர். ஆண்களும் பெண்களுமாக நிறையப்பட்டதாரிகள் அவர்களில் ஒருவர் கூட்டத்திலிருந்து விலகி தனிமையில் நின்றபடி நடப்பவற்றை விரக்தியுடன் அவதானித்துக்கொண்டிருந்தார். கண்ணாடி அணிந்திருந்தார். தாடி வைத்துள்ளார். தாடி அவருக்கு அழகு சேர்த்தது . 'கனவு' பத்திரிகை நிருபருக்கும் அந்த இளைஞருக்கும் இடையில் நடந்த கற்பனை உரையாடலை இனிப் படி யுங்கள்.)*

நிருபர்: வணக்கம்!

இளைஞர்: நீங்களும் மறியலில் ஈடுபட வந்தனீங்களே?

நிருபர்: இல்லையில்லை! நான் 'கனவு'ப்பத்திரிகை நிருபர். செய்தி சேகரிக்க வந்தனான். உங்களையும் ஒரு பேட்டி எடுத்து பேப்பரிலை போட்டால் நல்ல வரவேற்புக்கிடைக்கும் என நினைக்கிறேன்.

இளைஞர்: எங்களை ஒருவரும் பேட்டி எடுக்கிறேல்லை. கேள்வியளைக்கேளுங்கோ

நிருபர்: உங்கட பெயர்,

இளைஞர்: பொதுப்பெயர் பட்டதாரி
இயற்பெயர் வேலையப்பன்

நிருபர்: ஊர்?

இளைஞர்: வெந்நீரூற்று!

நிருபர்: வயது?

இளைஞர்: கலியாணத்துக்கு காத்திருக்கும் வயது!

நிருபர்: பட்டம்?

இளைஞர்: சீதனம் கேட்கப் போதுமான பட்டம்!

நிருபர்: நீங்கள் நம்புறது?

இளைஞர்: சாத்திரத்தை

நிருபர்: நம்பாதது?

இளைஞர்: அறிக்கைகளை

நிருபர்: விரும்புகிறது?

இளைஞர்: நியமனக்கடிதத்தை

நிருபர்: விரும்பாதது

இளைஞர்: "தம்பி! இப்ப என்ன செய்யிறீர்? எண்ட கேள்வியை,

நிருபர்: இந்த மறியல் போராட்டத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

இளைஞர்: எனக்கு "விஸ்வநாதன் வேலை வேணும்" எண்ட பாட்டுத்தான் ஞாபகம் வருகுது.

நிருபர்: ஏன்?

இளைஞர்: "காத்திருந்து காத்திருந்து காலங்கள் போகுதடி" (எனப்பாடிவிட்டு) "காதலிக்க நேரமில்லை" எண்டு சொல்லிப்போட்டு பட்டம் பெற்றவையும் "காலமெல்லாம் காதல் வாழ்க" எண்டு சொல்லிப்போட்டு பட்டம் எடுத்தவையும் இதிலை நிக்கிறோம்!

நிருபர்: இப்ப என்ன கோரிக்கையை முன்வைக்கிறியள்?

இளைஞர்: (பாட்டாக) வேலை! வேலை! வேலை! வேலை!
ஆம்பிளைக்கும் வேலை, பொம்பிளைக்கும் வேலை!
பொம்பிளையாப் போன ஆம்பிளைக்கும் வேலை?

நிருபர்: அதென்ன? பொம்பிளையாப் போன ஆம்பிளைக்கும் வேலை?

இளைஞர்: வேலை இல்லாமல் வீட்டுக்காரர் தாற "பொக்கற் மணியிலை" காலம் தள்ளுறவையை நாங்கள் அப்படி "கோட்டில" கதைக்கிறனாங்கள்

நிருபர்: நீங்கள் விரக்தியில பேசுறியளோ?

இளைஞர்: இல்லையில்லை! "போனால் போகட்டும் போடா" எண்ட நிலமைக்கு வந்திட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருபர்: என்ன சொல்லுறீங்கள்?

இளைஞர்: உங்களுக்கு ஒரு கதை தெரியுமோ? ஒரு அரசன் நாட்டிலுள்ள எல்லாரையும் ஒவ்வொரு பழம் கொண்டு வரச்சொன்னான். ஒவ்வொருத்தரும் கொண்டு வந்த பழங்களை அவையின்ரை வாய்க்குள் திணித்தான். முதலாவது ஆள் நாவற்பழம், இரண்டாவது ஆள் ஈச்சம்பழம், மூன்றாவது ஆள் ரம்புட்டான் பழம். நாலாவது ஆள் தேசிப்பழம். அடுத்தவர் கொய்யாப்பழத்தைவிழுங்க வேண்டி வந்திட்டுது. மற்றவர் ஜம்பு நாவல் பழம். இன்னொருவர் கறுத்தக்கொழும்பான் மாம்பழம் கொண்டு வந்தார். அதை வாய் கிழியக்கிழிய அரசன் அடைஞ்சான். வாய் கிழியத் தொடங்கி இரத்தம் வடியுது! ஆனால் மாம்பழம் கொண்டு வந்தவர் சிரிக்கிறார்.

நிருபர்: அவர் ஏன் சிரிச்சவர்?

இளைஞர்: உந்தக் கேள்வியைத்தான் அரசனும் கேட்டவர்.

நிருபர்: அதுக்கு அவர் என்ன சொன்னவர்?

இளைஞர்: -பின்னாலை ஒருவர் பலாப்பழம் கொண்டு வந்து நிற்கிறார். அவர் என்ன பாடுபடப்போகிறார்? எண்டு நினைக்க நினைக்க எனக்கு சிரிப்பு வருகுது.

நிருபர் :- ஏன் உந்தக் கதையைச் சொன்னனீங்கள்?

இளைஞர் :- நான் 2002 ஆம் ஆண்டு பட்டம் பெற்றனான். 2001 இல் பட்டம் பெற்றோம் பதவி கிடைக்கவில்லை. 2000 இல் பட்டம் எடுத்தோம் பட்டினிதான் மிச்சமாச்சுது. 1999 இல் பட்டம் கிடைச்சுது ஐஞ்சு வருசம் கண்ணீர் பெருகிச்சுது. 1998 இல் பட்டம் தந்திச்சினம். காற்றிலை மானம் பறந்துபோகுது.

நிருபர் : - நீங்கள் ஒரு பட்டதாரி எண்டவகையிலை உப்பிடி ஒரு நிலைமை தோன்றுவதற்கான, சமூகக் காரணம் என்ன?

இளைஞர் :- பெரிய பெரிய சொல்லிலை கேள்வியைக் கேக்கிறீயள்! நான் ஒரு பாட்டிலை பதில் சொல்லுறன் "பணம் பந்தியிலை! குணம் குப்பையிலை."

நிருபர் :- வேலை தேடும் பட்டதாரிகளின் அடுத்த திட்டம் என்ன?

இளைஞர் :- எம்மில் நீண்டகாலமாக வேலைதேடும் பட்டதாரிகளைப் பாராட்டி நாங்கள் ஒரு விழா எடுக்கப்போகிறோம். பல்கலைக்கழகத்திலை தொடங்கி முருகன் கோயில் மட்டும் மூத்த பட்டதாரியளை அழைச்சுக்கொண்டு வரப்போறம்.

நிருபர் :- ஏன் முருகன் கோயிலைத் தேர்ந்தெடுக்கிறியள்?

இளைஞர் :- நாங்கள் படிக்கிற காலத்திலைகூடக் கும்பிடுறது அவரைத்தான். அதோடை இளைஞர்களின் கடவுள். அதுமட்டுமல்லாது ஒருவரும் குறை நினைக்கக்கூடாது; எங்கடை நிலைமைதான் அவருக்கும்...........

நிருபர் :- என்ன?

இளைஞர் :- பேப்பரிலை போடாதையுங்கோ! அவரும் முறையான முறையிலை நேர்மையா ஒரு பொருளுக்கு முயற்சி செய்ய, ஒராள் இடையிலை புகுந்து விளையாடிப்போட்டுது.

நிருபர் :- பட்டதாரிகள் ஊர்வலமாக வரப்போறியள்?

இளைஞர் :- நீங்கள் தப்பா நினைச்சுப்போட்டியள். சமாதான நீதவான் பட்டம் எடுத்தவையை ஊர்வலமா அழைச்சுப் பாராட்டுவிழா எடுக்கிறமாதிரி, நாங்கள் நீண்டகாலமாக வேலை தேடுற பட்டதாரியளைப் பாராட்டிக் கௌரவிக்கப் போறம்.

நிருபர் :- ஏன்?

இளைஞர் :- அது புதுசா பட்டம் எடுத்து வேலைக்குக் காத்திருக்கிறவைக்கு ஒரு ஊக்கமருந்து குடுக்கிறமாதிரி இருக்கும்.

நிருபர் :- விழாவை என்னெண்டு பிளான் பண்ணியிருக் கிறியள்?

இளைஞர் :- தொண்டர் ஆசிரியரில் ஒராளையும், பகுதிநேர ஆங்கில ஆசிரியை ஒருவரையும், மீன்பிடி டிப்பிளோமா, உடற்கல்வி டிப்பிளோமா, தொழில்நுட்பக் கல்லூரியிலை படிச்சவை அப்பிடியெண்ட ஒவ்வொருத்தரைக் கூப்பிட்டுக் கலந்துபேசிக் குடுக்கப்போறம்.

நிருபர் :- அவையளை ஏன் கூப்பிடுறியள்?

இளைஞர்:-"ஆறு மனமே ஆறு
ஆண்டவன் கட்டளை ஆறு" எண்டு பாடத்தான்!

நிருபர்:- ஆண்டவன் கட்டளை ஆறு எண்டு சொல்லுறீங்கள் அதுக்கு ஏதும் அர்த்தம் இருக்கோ?

இளைஞர் :- ஓம், ஓம் கட்டளை ஒன்று: "அரச வேலையைப் பெற்றுக்கொள்ள A/L பரீட்சை போதுமானது. கட்டாயமானதல்ல"

கட்டளை இரண்டு: அரசுக்கு விசுவாசமான அரசியல்வாதி யின் அருட்பார்வை உனக்குத் தேவை

கட்டளை மூன்று: அருட்பார்வையைத் தீர்மானிக்கிறது உனது பணப்பையின் வீக்கம்,

கட்டளை நான்கு: நேர்மை, திறமை, ஒழுக்கம் எல்லாம் வேலை கிடைத்தபின் சொல்லவேண்டிய நற்சொற்கள்,

கட்டளை ஐந்து: வேலை கிடைக்கும் என நம்பிக்கையுடன் இரு. ஆனால், நம்பியிராதே!

கட்டளை ஆறு: ஒவ்வொரு நாளும் பேப்பரைப்பார்! ஆனால், ஓசியில் பார்!

நிருபர் :- பேப்பரை ஓசியில் பார்க்கச் சொன்னால் நாங்கள் என்ன செய்யிறது?

இளைஞர் :- ஒவ்வொரு நாளும் காசு குடுக்கிறது எண்டால் வேலைதேடும் பட்டதாரி காசுக்கு எங்கே போவான்?

நிருபர் :- இறுதியா ஒரேயொரு கேள்வி?

இளைஞர் :- கேளுங்கோ!

நிருபர் :- ஏன் அரச வேலையை எதிர்பார்க்கிறியள்?

இளைஞர் :- கிட்ட வாங்கோ! இதை மட்டும் பேப்பரிலை போடாதையுங்கோ! எங்களிலை ஒவ்வொருவரும் வேலை செய்யிறோம். வேலை இல்லாமல் ஒரு பட்டதாரியும் இல்லை. ஒருவர் மெத்தைக்கடையிலை, மற்றவர் புடவைக்கடை யிலை, இன்னொருவர் ரேடியோக்கடையிலை, அடுத்தவர் வீடியோக்கடையிலை. கச்சான் கடை, தேத்தண்ணிக் கடை அதுகளிலை எங்களை வேலைக்கு எடுக்கினம் இல்லை. நாங்கள் திரிசங்கு சொர்க்கத்திலை இருக்கிறம். திருவிழாக்களிலை மணிக்கடை போடலாம் எண்டால் தெரிஞ்ச சனம் வந்திடும். இதையெல்லாம் பேப்பரிலை போட்டு எங்கடை சீதனத்தைக் குறைச்சுப் போடாதையுங்கோ!

நிருபர் :- பாட்டோட தொடங்கினீங்கள். ஒரு பாட்டோடை முடியுங்கோவன்!

இளைஞர் :- "ஊரைத் தெரிஞ்சுகிட்டன், உலகைப் புரிஞ்சுகிட்டன் கண்மணி எந்தன் கண்மணி.
"நாலும் தெரிஞ்சுகிட்டன், நாலும் புரிஞ்சுகிட்டன் கண்மணி எந்தன் கண்மணி" போட்டுவாறன்.

நிருபர் :- மறியல் இன்னும் முடியேலை ?

இளைஞர் :- பெயின்ற் விக்கிற விற்பனைப் பிரதிநிதியா வேலை செய்யிறன். வாகனத்தைக் கராச்சிலை விட்டுவிட்டு இஞ்சை வந்தனான். வாகனத்தைத் திருத்தியிருப்பினம் போகவேணும்.

"ஓடி ஓடி உழைக்கணும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும்" எனப்பாடிக்கொண்டு செல்கிறார்.

●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பீட்டர்: என்னுடைய மனைவி ஒரு தேவதை.

சிறில்: நீ கொடுத்து வைத்தவன், என்னுடைய மனைவி இன்னும் உயிரோடு இருக்கிறாள்.



டிக்: என்னுடைய மாமா மர உச்சியிலிருந்து விழுந்து இறந்து விட்டார்.

நிக்: அவர் அங்கே என்ன செய்து கொண்டிருந்தார்.

டிக்: தற்கொலை செய்து கொள்ள, கயிறுக்கு முடிச்சு போட்டுக் கொண்டிருந்தார்.

# லண்டன் லட்டு



மேரி: அந்தப் பிரபல நடிகையை உனக்குத் தெரியுமா?

எஸ்தர்: ஓ...சின்ன வயதில் அவள் எங்கள் பக்கத்துவீட்டில் தான் குடியிருந்தவள். இருவருக்கும் ஒரே வயதுதான். இப்போது எனக்கு வயது முப்பத்தாறு ஆகி விட்டது! அவளுக்கு பதினெட்டு நடந்து கொண்டிருக்கிறது.



ஜோ: என்னுடைய பக்கத்து வீட்டுக்காரருக்கு திடீரென்று அவருடைய பிஸினஸில் நஷ்டம். விஷயம் தெரிந்ததும் அவருடைய நண்பர்களில் பாதிப்பேர் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டார்கள்.

ஜான்: அப்படியா! மீதிப் பாதிப்பேர்?

ஜோ: அவர்களுக்கு இன்னும் விஷயம் தெரியாது.



அவன்: எனக்குப் பேய் நம்பிக்கை இல்லை. நான் ஒரு பாழடைந்த பங்களாவில் தங்கியிருந்தேன். முதல் நாள் இரவு ஒரு மணிக்கு ஒரு பேய் எதிரேயிருந்த சுவரிலிருந்து வெளியே வந்தது.

இவன்: ஐயய்யோ... அப்புறம் என்ன செய்தீர்கள்?

அவன்: எதிரேயிருந்த சுவருக்குள் போய் ஒளிந்து கொண்டேன்.



பீட்டர்: எனக்கு கடனாக ஒரு ஐந்நூறு ரூபாய் தரமுடியுமா?

ஜார்ஜ்: எனக்கு மிகவும் பிடிக்காதவிடயம் அது. கடன் கொடுப்பதால் உண்மையான நட்பு போய்விடும் என்ற நம்பிக்கையில் இருப்பவன் நான்.

பீட்டர்: அதுவும் சரிதான். ஆனால், நம் இரண்டு பேருக்குமிடையே உண்மையான நட்பு இருப்பதாக நினைக்கவில்லை.



ஷீலா: ஏன் இப்படி அழுது கொண்டிருக்கிறாய்?

ஸ்டெலா: என்னுடைய நாய் காலையில் இறந்து விட்டது.

ஷீலா : அதற்காகவா இப்படி அழுகிறாய்? என் மாமியார் கூட காலையில் இறந்துவிட்டார். அழுகிறேனா பார்!

ஸ்டெலா: பிறந்ததில் இருந்து அவர்களை வளர்த்திருந்தால் என்னைப் போல நீயும் அழுவாய் தெரியுமா?



ஜோ: நான் என் மூக்குக் கண்ணாடியை எங்கோ கைதவறுதலாக வைத்து விட்டேன்.

ஜான்: ஏன் தேடிக் கண்டுபிடிப்பது தானே!

ஜோ: கண்ணாடி கிடைத்தால் தானே தேடமுடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிகதை

# வந்ததே வில்லங்கம்

தந்தை வில்லங்கம் வந்து முன்னே நின்றார். 'மகனே ஜம்புலிங்கம் உனக்குத் தீமையே வராது நன்மையே வர வேண்டும் என்றால்... என்னைப் போல உணமையைப் பேசு மகனே...' சற்று விளங்கிக் கொள்ளச் சிரமப்பட்ட ஜம்புலிங்கம 'என்னென்று தந்தையாரே உண்மை பேசுவது' இதைக்கேட்டதும் ' ஹி..ஹி.. ஹி' எனச் சிரித்த வில்லங்கம் 'இதற்கு முதலிலை நாவை அடக்கப் பழகுதல் வேண்டும். நாவினை அடக்காவிட்டால், நாவாலே எமக்குப் பல கெடுதிகள் வரும். விளங்காத ஜம்புலிங்கம் ' எப்படித் தந்தையே நாவால் கெடுதி வரும்' என்றதும், 'என்னுடைய அறிவில் சிறந்த உத்தம புத்திரனே... கேளும் நான் சொல் வதனை. 'ஒரு சமயம் முப்பத் திரண்டு பல்லும் சேர்ந்து நாக்கைப் பலமாகக் கடிக்கவே வலி தாங்க முடியாத நாக்கு 'ஏனப்பா என்னை கடிச்சுக் குதறுறீங்க... நான் என்ன பாவம் பண்ணினேன் உங்களிற்கு'... எனக் கேட்டதும் இன்னுமொரு தடவை முப்பத்திரண்டு பல்லும் சேர்ந்து கடித்து விட்டு, கடித்த காரணத்தைக் கூறத்தொடங்கின. 'நீ நாக்கு. நீ உள்ளேயிருந்து செய்யிற அட்டகாசம் கொஞ்ச நஞ்சமல்ல. நாங்களும் பொறுத் துத் தான் பார்த்தோம் பொறுக்க முடியாமல் தான் இந்த முடிவிற்கு வந்தோம்.... நீ வாறவன் போறவனிட்டையெல்லாம்... விசர்க்கதை கதைக்க அவன் பல்லைப் பொத்தித்தானே தாறான்... கண்டியோ...! யாராவது நாக்கைப் பொத்தித் தாரானா இல்லையே.... நீ கதைக்க வெளிக்கிட நாங்கள் நடுங்க வெளிக்கிடுவது உனக்கெங்கையப்பா தெரியப்போகுது. பட்டால்தானே தெரியும்... இனியாரோடையாச்சும் விசர்க்கதை கதைக்க வெளிக்கிட்டால், நாங்கள் கடிப்போம் என்றன முப்பத்திரண்டு பல்லும்...' இப்படியான நாக்கை கட்டுப்படுத்தி மகனே ஜம்புலிங்கம் உண்மையைப் பேசி, உயர்ந்த வனாய்மாறு. சரித்திரம் உன்னைப் போற்றும். காவியம் உன்னைப் பாடும், சென்றுவாறேன் மகனே! என்றுவிட்டு வில்லங்கம் மறைந்ததும், 'அப்பா... அப்பா' எனப் பின்னால் ஓடியபோது தான் 'என்னை விட்டுப் போகாதைங்க...' என ஓடிய ஜம்புலிங்கம் கட்டிலால் உருண்டு கீழே விழுந்தான்... பதறிப் போன பாட்டியம்மாவும் வேகமாக ஓடி வந்தே 'ஜம்புலிங்கம் என்ன... நடந்தது..?' பாட்டியம்மா... நான் கனவு கண்டுட்டன். கனவிலை எங்கப்பாவில்லங்கம் வந்தவர்... தன்னைப் போல உண்மை பேசி உயரச்சொல்லிப் போட்டு மறைஞ்சிட்டார் எங்கப்பா வில்லங்கம்...' என சோகத்துடன் இருந்த ஜம்புலிங்கத்திடம்... 'சரி..சரி எழும்பு கூட்டுறவுச்சங்க காவலாளி பதவிக்கெல்லோ விண்ணப்பம் கொடுத்தனி... இண்டைக்குத் தான் நேர்முகப் பரீட்சை நேரகாலத்தோடை வெளிக்கிட்டுப்போ ஜம்புலிங்கம்...' 'சரி பாட்டியம்மா' என்று



விட்டு வேளைக்கே வெளிக் கிட்டு நேரத்திற்கே கிளம்பி விட்டான் ஜம்புலிங்கம். 'என்னது கோப்பிறட்டி கதவு பூட்டியிருக்கு... ஏறிப்பாய வேண்டியது தான்...' என நினைத்து, ஏறிப்பாய்ந்த போதுதான் முன்னே சிங்கப் பல்லோடை அல்சேசன் நாய் ஒன்று நின்றது. கண்டதும் ஜம்புலிங்கத்திற்கு வேட்டி நனைந்தது. நாய் உறுமத் தொடங்கியதும் விளை யாட்டுப் போட்டிக்கு விசிலூதியது போல பின்னங் கால்பிடரியிலை முட்டத் தலை தெறிக்க ஓடிய ஜம்புலிங்கத்தைப் பாய்ந்து வந்த நாய் உருட்டி விளையாடவே ஜம்புலிங்கத்தின் நல்ல காலத்திற்கு காவலாளி வந்து நாயைப் பிடித்துவிட்டான்.... 'யாரடா நீ முன் கதவாலை வாறதற்கு பின் கதவாலை ஏறி விழுந்து வாறாய் மரியாதையாய்ச் சொல்லு என்றதும் பதறிப்போன ஜம்புலிங்கம் 'என்ரை அப்பன் வில்லங்கம் மீது சத்தியமாய் சொல்லு, றன் நேர்முகப் பரீட்சைக்கு வந்த இடத்திலை இந்த ஆட்டுக்கிடாய் மாதிரி இருக்கிற அல்சேசன் நாய் நேர்முகப் பரீட்சை வைச்சிட்டுது இந்தக் கிழிந்து போன வேட்டியோடை என் னண்டு போவன்...' என்று நினைத்த ஜம்புலிங்கம் ஏதோ நினைவு வந்தவனாய்.... கிழிந்த வேட்டியை மடித்து, மகாத்மா காந்தியடிகள் மாதிரிக் கட்டினான்.... உடனே நேர்முகப் பரீட்சைக்குச் சென்று அங்கே போடப்பட்ட கதிரையில் இருந்த போது தான்..... அங்கே நேர்முகப் பரீட்சைக்கு வந்தவர்களெல்லாம் ஜம்புலிங்கத்தைப் பார்த்துச் சிரிக்க "இண்டைக்குத் தான் எங்கடை சனங்களெல்லாம் சிரிப்பும் செந்தளிப்புமாய் இருக்குதுகள்" என்றுவிட்டுச் சிரித்த ஒவ்வொருதரைப் பார்த்தும் பதிலுக்குத்தானும் பெரிதாகச் சிரித்தான்... சிறிது நேரம் ஒரே சிரிப்பொலியாய் இருந்தது. "ஸ்ரொப்பிற்....!" உள்ளே இருந்துவந்த உத்தியோகத்தர் ஒருவர் கடுமையான தொனியில் கூறிவிட்டு, "சிரிக்க வந்தீங்களா... அல்லது இன்ரவியூவிற்கு வந்தீங்களா...." என்று பேசிவிட்டு, உள்ளே சென்றதும்... சிறிது நேரத்தில் ஜம்புலிங்கம்.... ஜம்புலிங்கம்..." என அழைக்கப் பட்டதும். பாதித் தூக்கத்திலிருந்த ஜம்புலிங்கம் பாய்ந்தடித்துக் கொண்டு உள்ளே ஓடிய போது, கால் தடக்கி இன்ரர்வியூ வோட்டிலை இருந்த முகாமையாளர் மீது மோதுப்பட்டு விழுந்தான்.... "ச்சாய்... கண் ணாடி விழுந்து போச்சப்பா" எனத் தேடிய முகாமையாளரின் கண்ணாடியை ஜம்புலிங்கம் தானே எடுத்துக் கொடுத்து விட்டு நின்றார்.... ஜம்புலிங்கத்தின் கோலத்தைப் பார்த்த, அருகிலிருந்த உத்தியோகத்தர் "என்னது மகாத்மா காந்திபோல வந்திருக்கிறாய்...." இதைக் கேட்டதும் தான் தாமதம், எட்டிப் பாய்ந்த ஜம்புலிங்கம் "ச்சு... ச்சு..." என அவர் மீது முத்தமழை பொழிந்தான். "என்ரை அப்பு வில்லங்கத்திற்கு நான் மகாத்மா காந்தி போல வரவேண்டுமென்று கன நாள் ஆசை அதை நீங்களே சொல்லிப்போட்டிங்களையா''.

''ஸ்ரொப்பிற்!'' முகாமையாளரின் காட்டுக்கத்தல் "இந்தாளை முதலிலை வெளி யிலை அனுப்பு..." போற இடமெல்லாம் வில்லங்கம் வருவதை நினைத்து வருந்தினான் ஜம்புலிங்கம். ●

**பொன்.சுகந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட! இப்படியும் ஒரு அதிர்ஷ்டம்



தங்கவேலாயுதன்

அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக்கொண்டு வரும் என்பார்கள். அதிர்ஷ்டம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரூபத்திலே வரும். சிலருக்கு கணவன் மூலமாக அது வந்து சேரும். மற்றும் சிலருக்கு மனைவியின் மூலமாக அது வந்து சேரும். பிள்ளைகளினாலும் அதிர்ஷ்டம் வந்து சேரும்.

கொழும்புப் பகுதியிலே தினமும் நடமாடுகின்ற எங்களுக்கு எப்பொழுதும் எங்கள் காதுளைப் பிய்க்கின்ற சத்தம் வாசனாவ.....வாசனாவ.... அதே வாசனாவா.... அதிர்ஷ்டம்... அதிர்ஷ்டம்.... இன்றைய அதிர்ஷ்டம்... என்கின்ற இந்தக் கூக்குரலாகத்தான் இருக்கும்.

புறக்கோட்டை பஸ் நிலையப் பக்கம் போனோம் என்றால் அரசமரச் சந்தியில்... அப்பால் பேருந்து நிலையத்தில் எல்லாம் இரண்டு மூன்று வாகனங்களின் மேலே ஆட்டோவை ஏற்றிவைத்துக்கொண்டு...மோட்டார் சைக்கிளை வைத்துக் கொண்டு இருப்பார்கள். அந்த வாகனங்களைச் சுற்றி எப்பொழுதும் கூட்டமாகவே இருக்கும். பத்து ரூபாயைக் கொடுத்து அதிர்ஷ்ட லாபச்சீட்டை வாங்கி நாணயக் குற்றியினால் உரசிக் கொண்டேயிருப்பார்கள்.... நாளும் பொழுதும் புதிது புதிதாகஅதிர்ஷ்ட லாபச் சீட்டுக்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. எமது நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில், ஏன் உலக நாடுகள் பலவற்றிலும் இந்தச் சூதாட்டம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

இங்கே கணவனோடு அதிர்ஷ்டம் கிடைத்த மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த ஜெப்ரி என்கின்ற ஜரிசுக்கு கூரையை அல்ல வானைத்தைப் பிய்த்துக் கொண்டு அதிர்ஷ்ட மழை பொழிந்திருக்கின்றது.

ஒன்றா....இரண்டா... நானூறு கோடி ரூபாய்.... இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு இவள் என்னதான் செய்யப் போகிறாள்?....

தான் இந்தப் பணத்தில் முதலில் செய்யப்போவது புதிய துணி கழுவும் இயந்திரம் வாங்குவதுதானாம். 58 வயதான ஜரிஸ் இந்த வெற்றி பெற்ற சீட்டை வாங்கியது ஜுலை மாதம் 14ஆம் திகதியாக இருந்தாலும் வேறு சீட்டுக்களுடன் சிறிய அலுமாரியில் இருந்த கண்ணாடிப் பாத்திரம் ஒன்றில் அதனை வைத்துவிட்டு மறந்தே போய்விட்டாளாம்!

இந்தப் பெண்மணிக்கு நினைத்துப் பார்த்திராத விதமாக அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் வழங்கப்பட்ட ஆகக்கூடிய தொகைக்கு அவள் உரியவளாகி இருக்கின்றார். அந்தத் தொகை 20 மில்லியன் பவுண, அதாவது கிட்டத்தட்ட 400 கோடிக்குச் சமன்.

இதில் மற்றொரு விசேடம் என்னவென்றால், வடக்கு அயர்லாந்தில் வாழ்கின்ற ஜரிஸ், புற்றுநோயினால் பீடிக்கப்பட்ட பெண்மணி. புற்றுநோய்க்காக வைத்தியத்தினைச் செய்து கொண்டிருக்கின்ற அவள் இரண்டு மகள்மாருக்குத் தாயார் மாத்திரமல்ல, விரைவில் அவள் பாட்டியாகவும் போகின்றவள். ஆம்! அவளது ஒரு மகள் தற்பொழுது கர்ப்பிணியாக இருக்கின்றாள்.

தான் இந்தப் பணத்தில் முதலில் புதிய துணி கழுவும் இயந்திரம் ஒன்றை வாங்கப்போவ தாக அவள் கூறுகிறாள். சிறிய அலுமாரியில் சீட்டை வைத்துவிட்டு மறந்துபோயிருந்த அவளை தொலைக்காட்சிச் செய்தியின் வடிவில் வந்து அதிர்ஷ்டம் அழைத்தது. வெற்றிச்சீட்டு யாராலும் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் பகுதி பகுதியாக ஊடகங்களின் மூலம் செய்யப்பட்ட விண்ணபத்தைச் செவிமடுத்தபோதுதான் - அந்தக் கணத்தில்தான் அவளுக்கு இந்தச் சீட்டைப் பற்றிய ஞாபகமே வந்தது.

“தொலைக்காட்சியில் செய்தியைப் பார்த்துக்கொண்டிருந்தபோதுதான் காண்பிக்கப்பட்ட அதிர்ஸ்டச் சீட்டின் இலக்கத்தை நான் பார்த்தேன். நான் அந்த இலக்கத்தை என்னிடம் இருந்த சீட்டோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது என்னால் நம்ப முடியாமல் இருந்தமையால், மீண்டும் பார்க்குமாறு என் மகள்மாரிடம் கூறினேன். அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பின் அதிர்ஸ்டசாலி நான் எனத் தெரிந்துகொண்டதும் மிகப்பெரிய சந்தோசம் எனக்கு ஏற்பட்டது. நான் பெரிய கண்ணாடி தம்ளர் ஒன்று நிறையப் பாலைக் குடித்துவிட்டுத் தூங்கப்போனேன்.

“இப்பொழுது நான் முதலிடம் வழங்குவது எனது குடும்பத்தவர்களினது, அன்புள்ளவர்களது எதிர்காலத்தின் பொருட்டு ஏதாவது அவர்களுக்குச் செய்து கொடுப்பதற்கு” செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றிய அவர் இப்படிக் கூறியிருந்தார்.

தனது எழுபத்து இரண்டு வயதான கணவன் றொபேட்டிற்கு புதிய மோட்டார் வண்டி ஒன்றை விலைக்குப் பெற்றுக் கொடுப்பதும் மகள்மாருக்கும் விரைவில் இந்த உலகின் ஒளியைக் காணப்போகின்ற பேரனுக்கோ பேத்திக்கோ தேவையான அனைத்தையும் வழங்குவது ஜரிஸினுடைய ஆசையாகும். ஒரு மோட்டார் வாகனத்தை கணவனுக்காக விலைக்கு வாங்குவதற்கு அவள் நினைத்தாலும், தற்பொழுது கணக்குப் பார்த்துள்ள விதமாக அவளுக்கு இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ‘எஸ்ட்டன் மாட்டின் வெனவிஸ்க்’ இன மோட்டார் வண்டி 157ஐ விலைக்குப் பெற்றுக் கொள்ள முடியும். துணி கழுவும் இயந்திரம் என்றால் 33,500 வாங்க முடியும். ‘ப்லெக்பூல்’ என்னும் இடத்தில் உல்லாசத்திற்கென உள்ள கடற்கரைக்குச் செல்வதற்கு 670,000 பேர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நுழைவுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும். க்ளோபல் 5000 ஜெட் விமானங்களை வாங்க முடியும்.

எப்படியாக இருந்தாலும் இந்தத் தொகையைத் தனது தேவைக்கு அதிகமாக மாற்றப்போவதில்லையென எதிர் பார்க்கும் ஐரிஸ் தான் வசிக்கின்ற வீட்டைக்கூட மாற்றும் எண்ணம் இல்லை என்கிறார்.

"சிலவேளைகளில் நான் "ப்ளெக்பூல்' கடற்கரையில் ஐந்து நாட்கள் அளவில் விடுமுறையைக் கழிக்கச் செல்லக் கூடும்" ஐரிஸ் இவ்வாறு கூறும்பொழுது, அவளது குடும்பத் தவர்கள் சொல்கிறார்கள், அவளது புற்றுநோய்க்கு மேலும் சிகிச்சையளிப்பதற்கு இந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்று. அடுத்த மாதமளவில் அவளுக்கு பார தூரமான ஒரு சத்திரசிகிச்சை செய்வதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

எங்களுக்கென்றால் இந்த லொத்தர் வெற்றி பற்றி மிகவும் சந்தோசம். தற்பொழுது அவரது நோய்க்கு மிகவும் சிறந்த சிகிச்சையை வழங்கமுடியும் என்பதனால். இப்படி ஐரிசின் மகள் கூறுகிறாள்,

"இந்த அதிர்ஸ்ட சீட்டிழுப்பின் இலக்கங்களாக 6,27, 33,38,45,47 அமைந்தன. இதற்கு முன்பு கூட அயர்லாந் தில் அறிவிக்கப்பட்டுள்ள பெரிய அதிர்ஸ்ட லாபச் சீட்டிழுப் பில் வெற்றியைப் பெற்றுக்கொண்டவர் 'பெல்பாஸ்ட்'இல் உள்ள பேருந்துச் சாரதியான 'பீட்டர் லவேரி' என்பவர் ஆவார். 1996இல் அவருக்கு 10 மில்லியன் பவுணுக்கு (200 கோடி ரூபா) கிட்டிய தொகை கிடைத்தது. ●



நிர்வாகி: ஐயா! எங்கட நிறுவனம் சென்றவருடம் இலாபத்திலா நட்டத்திலா இயங்கியது

கணக்காளர்: கொஞ்சம் பொறுங்கோ சார் இப்பதான் தொங்கல் கணக்குப் பார்க்கிறன்.

-பகிஸ்

## குட்டிக்கதை

# நீதியற்ற தண்டனை



சாந்தன் அப்போது 9 ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த காலம்.

இப்போது போன்று நீலக்களிசானும் வெள்ளைச் சேட்டும் 'யூனிபோமாக' போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் செல்லும் காலமல்ல. சும்மா நிறக் களிசானும் சேட்டும் அல்லது வேட்டியும் சேட்டும் போட்டுக் கொண்டு போகிற காலம்.

திருநீல கண்டமாஸ்டரும் வெள்ளை வேட்டியும், மடிப்புக் கலையாத சால்வையும், நஷனல் சேட்டும் போட்டுக்கொண்டு வருவார். நல்ல சிவந்த மனிதர். நெற்றியில் எந்தநேரமும் திருநீற்றுக் குறி, மூக்குக் கண்ணாடிகூட நெற்றியில் உயர்த் தியும், பின் கண்களில் அடிக்கடி போடுவதுமாக மாறி மாறிப் போட்டுக் கொள்வார்.

திருநீலகண்ட மாஸ்டர் அன்றும் வகுப்புக்குப் பாடம் எடுப்பதற்காக வந்தார். அவர் வந்தாரென்றால் வகுப்பில் ஒரே குதூகலம். என்ன செய்தாலும் கண்டிக்க மாட்டார். பரீட்சையில்கூட பக்கம் பக்கமாக எழுதினால்தான் அடிமட் டத்தால் அளந்து புள்ளிகள் போடுவார் என மாணவர்கள் கூறுவர்.

வகுப்புக்கு வந்திருந்த திருநீலகண்ட மாஸ்டர் தமிழ் படிப்பித்துக் கொண்டிருந்தார். கும்பகர்ண வதைப் படலத்தில் இருந்து இராமர் சீதை சந்திப்புப் பற்றி - "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என வெகு சுவா ரஷ்யமாகப் படிப்பித்துக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் மாணவிகள் இருவர் மனையியல் பாடத்தில் தாங்கள் செய்த உணவுகளை மாஸ்டருக்கு வழங்குவதற்கே வந்திருந்தார்கள்.

இந்த நேரத்தில் சாந்தனுக்கு உண்மையிலேயே விக்கல் ஏற்பட்டிருந்தது. அந்த விக்கல் பெரிய சத்தமாகக் கேட்க, அமைதியாக எப்பொழுதும் இருக்கும் திருநீலகண்ட மாஸ்டர் ஆவேசமடைந்தார். வந்திருந்த மாணவிகளுக்கு 'நக்கல்' செய்ததெனக் கருதி - "யாரடா பகிடி விட்டவன். இஞ்சே வா" என்று கட்டளை இட்டார்.

சாந்தனுக்குப் பிரம்பினால் அடித்தார். அவன் தான் பகிடி விடவில்லை என பலதரம் தெரிவித்தபோதும் திருநீலகண்ட மாஸ்டர் விடுவதாக இல்லை. தொடர்ந்தும் அடிகள்.........

சந்தர்ப்பமும், சூழ்நிலையும் ஒருவனைக் கெட்டவனாக்கும் என்பது சாந்தனின் விடயத்தில் எவ்வளவு உண்மையாகிவிட்டது. நீதி இந்த விடயத்தில் செத்துவிடுகிறது. ●

-மணிசேகரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிகதை

# சொக்கண்ணரைத் திருத்த ஏலாது

-குகன்-

இரவு 8.00. மணி யாழ். நகர் பஸ் நிலையத்தில் பருத்தித்துறை கடைசி பஸ் புறப்படத் தயார் நிலையில், பயணிகள் அவசரமாக வந்து பஸ்ஸில் ஏறிக்கொள்கின்றார்கள். யாழ் நகர், கொஞ்சம் கொஞ்சமாக இருள் நிலைக்குச் சென்று கொண்டிருக்க C.T.B. பஸ்கள் மாத்திரம் மின் விளக்குகளுடன் உயிர்த் திருந்தன. ஏறக்குறைய சீற் எண்ணிக் கைக்கு பயணிகள் அமர்ந் திருக்க நயினாதீவுக்குச் சென்றிருந்த மக்கள் கூட்ட மொன்று அவசரமாக வந்து பஸ்ஸை நிறைக்கின்றது. கூடவே மல்லிகை மணமும் 'சென்ட்' மணமுமாக பஸ் கலகலப்பாக மாறுகின்றது. நானும் எனது நண்பனும் பிள்ளைகளுடன் வந்தவர்க ளுக்காக எழுந்து இடம் கொடுக்கின் றோம். கடைசி சீற்றில் இளைஞர் கூட்ட மொன்று கேலி பேசிச் சிரித்தபடி இருந்தது. அவர் கள் வழமையாக அந்த பஸ்ஸில் போய் வருகின்றவர்கள் போலும். அப்போது ஒரு மெல்லிய மனிதர் பஸ்ஸினுள் ஏறுகின்றார். முகத்தில் குறுந்தாடி. வயது ஐம்பது இருக்கலாம். கோல்ட் பிறேம் போட்ட கண் ணாடி, சப்பாத்து, ஒரு வித உத்தியோக தோரணை. வந்தவர் மது போதையில் தள்ளாடியபடி ஒவ்வொரு பயணிகளையும் நோட் டமிடுகின்றார். குறுக்கு நெடுக்காக வேகமாக நடக்கின்றார். அவரது செய்கைகள் ஒருவித கோமாளித் தனத்துடன் இருந்தது. வேகமாக நடந்தவர் எல்லோரை யும் ஒருவித ஏளனப்பார்வையால் நனைக்கிறார். பின் வாசலுக்கருகில் உள்ள இருக் கையில் சாய்ந்தபடி நிற்கின்றார். இருக்கையில் மனி தர்கள் இருக்கின் றார்கள் என்ற லஜ்ஜை இல்லாமல் பெரும் குரலில் ஏதோதோ சொல்கி றார். அவர் வாயில் இருந்து பிரிட் டிஸ்காரனின் ஆங்கிலமும் மாலை அருந்திய சாராய மணமும் சிதறுகின்றன.

நான் நண்பனிடம் " என்ன மச்சான் இந்தாள் பார்க்க படிச்சவன் மாதிரி இருக்கிறான். இப்படி நடந்து கொள்கிறான்" என்றேன். நண்பன் என்னிடம், இஞ்ச பஸ்சில யாராவது ஒருத்தரெண்டாலும் வெறிகாரன் கத்துறான் என்று இவருடைய செயலை எதிர்த்துக் கதைச்சவையளே? நீ சும்மாயிரு" என்றான். நான் நடப்பவற்றை நோட்டமிடுகிறேன். அவரின் சத்தம் வர வர அதிகரிக்கிறது. "டேய்! சொக்கண்ணை வந்திட்டார் இண் டைக்கு ஒரே பம்பலதான்" பின் சீற்றில் இருந்த இளைஞர் கூட்டத்தினரிடம் ஒரே பரபரப்பு. இவரது ரசிகர் மன்றம் போல். உடனே சொக் கண்ணர் எனப்படும் அந்த மனிதர் அவர்களைப் பார்த்து வெற்றிப் புன்னகை யொன்றை வீசுகின்றார். கூடவே இளை ஞர்களது அங்கீகாரம்




அவருக்கு உசா ரைக் கொடுக்க வடிவேல் ஸ்டைலில் கண்ணை இடிக்கி யபடி எல்லாப் பயணிகளை யும் ஒரு பார்வை பார்த்தார். அதற்கும் இளை ஞர்களிடம் இருந்து சிரிப்பொலியெழுகிறது. கள் அருந்திய மந்தியாகிறார் சொக்கண்ணர். கையைக் காலை உதறி ஒருவித பாவனை செய்துவிட்டு "இந்த பஸ்சில் இருக்கிற ஒருத்தரையும் எனக்கு வடிவாய்த் தெரியவில்லை என்ன செய்யலாம்" ஒரு வித குளறலாக அவரது குரல் ஒலிக்கிறது. மீண்டும் கண்ணை இடுக்கி ஒரு விதப் பார்வை பார்த்தபடி இருக்கையில், இருந்த ஒருவரது கண்ணாடியை வேகமாகப் பறித்துத் தனது கண்களில் அணிந்து கொள் கின்றார். அந்த மனிதர் படபடப்புடன் எழுந்து ஏதேதோ ஆங்கிலத்தில் பேச, சொக்கண்ணரும் தனக்குத் தெரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தில் அவரை அடக்கிவிட்டு கண்ணாடியுடன் சனங்களையும் தள்ளி விழுத்தியபடி ஒருவித ராஜநடை நடந்து பார்க்கிறார்.

"டேய் அது எங்கட நடராஜா மாஸ்டரெல்லோ? அவரின்ரை கண்ணாடியையோ இவன் பறிச்சவன்" என்று நண்பனிடம் கூற "நீ நடக்கிறதை வேடிக்கை பார்" என்கின்றான் நண்பன். நான் அவனை ஒரு வினோதப் பார்வை பார்த்துவிட்டு சொக்கண்ணரைப் பார்க்கின்றேன். அவர் எம்.ஜி.ஆர். காலத்து வில்லன் வீரப்பாவைப் போல் கர்வப்பார்வை பார்த்து பஸ் அதிர நடந்தபடி "டேய் யாரும் என்னை ஒண்டும் செய்ய ஏலாது..." பல்லு நெருமுகின்ற சத்தம் பெரிதாகக் கேட்கின்றது. சாராயம் செய்யும் வேலை!

"உமக்கு வேணும். நான் இடம் கேக்க நீர் பெரிய புறியம் விட்டனீர். இப்ப என்ன நடந்தது பார்த்தீரே" சொக்கண்ணரைப் போல் இன்னுமொரு கேஸ் கண்ணாடியைப் பறிகொடுத்த நடராஜா மாஸ்டரைப் பார்த்து ஏளனமாய் இளித்தது.

தனக்கு சப்போட் அதிகரிக்க அதிகரிக்க துருதுருப்பு ஏறுகின்றது சொக்கண்ணருக்கு. அது நடந்துநருக்கு எரிச்சலைக் கொடுக்க "நாங்கள் காலமை தொடங்கி சனங்களோட படுறபாடு போதாதெண்டு இந்த இழவு வேற... இவன் இறங்கினாத்தான் பஸ் எடுக்கலாம்" வேலைக்களைப்பினால் நடத்துநர் சத்தமிட யாரும் அவரைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. அது சொக்கண்ணருக்கு உசாரைக் கொடுக்க, பஸ்ஸினுள் நயினாதீவுக்குச் சென்றுவிட்டு அலங்காரம் மாறாமல் இருந்த ஒரு பெண்மணியின் மடியில் "தொப்" என்று உட்காருகின்றார். அந்தப் பெண்ணும் அருகி லிருந்த பெண்ணும் வீரிட்டுக் கத்தியபடி எழுந்து நிற்கின்றனர் பிரயாணிகளிடம் சலசலப்பெழுகிறது.

"மச்சான் இவனுக்கு ரெண்டு சாத்துச் சாத்தினால் தான் சரி" என்னால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை "நீ வன்னியில் இவ்வளவுகாலமும் இருந்தனி. அங்க இப்பிடி பொம்பிளையளோட ஒருத்தன் தவறுதலாக நடந்திருந்தால் என்ன நடந்திருக்கும்... சனமே அவனை அடிச்சுத் துவைச்சிருக்கும். இஞ்ச அப்பிடியே.. பின்னுக்குப்பார் வேடிக்கையை" என்கின்றான் நண்பன். அங்கே பின் சீற்றில் இளைஞர்கள் சொக்கண்ணரின் செயலுக்காக கரகோஷம் செய்து கொண்டிருந்தார்கள்.

"தம்பிமாரே! நீங்கள் அக்கா தங்கையுடன் பிறக்கேல்லையா, உங்கட சகோதரத்தின்ர மடியில அவன் இருக்க நீங்கள் சிரிச்சுக்கொண்டிருக்கிறியளே!" ஒரு பெரியவர் மிகவும் பதட்டத்துடன் இளைஞர்களைப் பார்த்துக் கேட்கின்றார்.

"பழசு சும்மா இரும்... நாங்கள் பருத்தித்துறை போகும் மட்டும் பம்பல் பாப்பம் எண்டா குழப்பி விடுவியள் போல கிடக்கு" மிகவும் மரியாதைக்குறைவாக அந்த வயோதிபரைத் திட்டுகின்றனர் இளைஞர்கள். அவமானத்தால் அவரது முகம் சுருங்கிப் போகின்றது. "எத்தினையோ பெடியள் எவ்வளவு லட்சியங்களோடு இருக்கையில இவங்களுக்கேன் இப்படி ஒரு மனநிலை" என்று மனதுக்குள் வேதனையடைகின்றேன்.

"இவர் இறங்கினால் தான் பஸ்ஸை எடுக்கலாம். முதலில் கீழே இறங்கும்" நடத்துநர் சொக்கண்ணரை பஸ்ஸினைவிட்டு வலுக்கட்டாயமாக இறக்க முயற்சிக்க-

"என்னை இஞ்ச ஒருத்தராலும் இறக்க முடியாது. ஏலுமெண்டால் இறக்கிப்பாருங்கோ பாப்பம்" நடத்துநர் பெடியனுக்கு கிட்டவந்து முறைச்சபடி சொக்கண்ணர்.

"இவருக்கு வழியில இருக்கு, முறையாய்ப் போட்டுவிடிறன் பார்" மனதுக்குள் கறுவிக்கொள்கிறேன்.

சாரதி நடத்துனரை சமாதானப்படுத்த பஸ் ஒரு வழியாக நிலையத்தை விட்டுப்புறப்படுகின்றது. பின் சீட் இளைஞர்கள் தங்கள் கதாநாயகனுக்காக சீட் ஒன்றை வழங்கிக் கௌர

---

மரத்திரைக் கதை

## இலட்சியவாதி

ஒரு கல், பூந்தோட்டத்தில் ஏனோ தானோ என்று உலகத்தைப் பற்றி ஒரு கவலையும் இல்லாமல் சும்மா கிடந்தது.

இன்னொரு கல், படிக்கல்லாகி மனிதரை வீட்டுக்குள்ளே இட்டுச் செல்வது' என்று இலட்சிய வாழ்வில் ஈடுபட்டது.

என்ன அநியாயம்?

பூந்தோட்டத்தின் ஒதுக்குப்புறக் கல்லுக்கு ஒரு தொல்லையும் இருக்கவில்லை. இலட்சிய வாழ்வில் ஈடு பட்ட படிக்கல்லையோ அன்றாடம் ஏறுவோரும் இறங்குவோரும் உதைத்துக் கொண்டே இருந்தார்கள்.

பூந்தோட்டக்கல்லினதும் படிக்கல்லினதும் சரித்திரம் தெரிந்த வீட்டுப் பூனை படிக்கல்லுக்... இரங்கியது. பூனை சொன்னது : இலட்... எந்த நாளும் உதை !



## குனிவு

குலையைத் தொங்கவிட்டுத் தலை ... வாழை மரத்தைக் காட்டி "குனிந்து நிற்கும் அந்த வாழைமரம் ஒரு கோழைதானே?" என்று அணில் நத்தையிடம் கேட்டது.

அணிலின் சிறுபிள்ளைத் தனத்தைப் புரிந்து கொண்ட நத்தை அணிலுக்கு வாழையின் பெருமையை எடுத்துச் சொல்லியது:

உலகத்துக்குப் பழக்குலையை வழங்கிவிட்ட பெருமையில் அல்லவா வாழை தலைகுனிந்து நிற்கிறது. சாதிப்பவர்களின் அடக்கமே வாழையின் தலைகுனிவு" என்றது நத்தை.

நத்தையின் கூற்றை ஏற்று உணர்வு பெற்ற நிலையில் அணில் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டது.

"வாழை வேறு கோழை வேறு"

---

கவிதைத்தேன்

## பரிசில்

அன்று பாலனின் பிறந்த நாள். ஏழையாகையால் அவன் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடவில்லை. அன்று மாலை அவனது பணக்கார நண்பன் சுகுமார் வந்து அவன் கைகளில் ஒரு பார்சலை கொடுத்து பிறந்த நாள் வாழ்த்தும் தெரிவித்து விட்டுப் போனான். பாலன் பார்சலைப் பிரித்துப் பார்த்த போது அதற்குள் விலை உயர்ந்த ஓர் அழகான பரிசு ஒன்று இருந்தது. அது ஒரு வெற்று மணிப் பேர்ஸ்

-தேனுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்க அவர் அதிலிருந்து கண்டபடி எல்லாரையும் திட்டிக் கொண்டிருந்தார்.

பஸ் ஆரியகுளத்தைத் தாண்டிய போது திடீரென்று குலுக்கலுடன் நிற்கின்றது" றைவர் என்ன இழவுக்கு பஸ்ஸ நிப்பாட்டினனி... கெதியாய் பஸ்சை எடு" சொக்கண்ணர் புலம்ப "பஸ் பழுதாப் போச்சுது. சின்னப் பிழைதான்" என்கிறார் சாரதி." சின்னப்பிழையெண்டால் நீர் திருத்துமென்'' துள்ளிஎழுந்து சாரதியின் இருக்கைக்கருகில் நின்று கொண்டு குரல் கொடுக்கின்றார் குடிமகன். "நாங்கள் பஸ் பிழையெண்டால் திருத்தேலாது. அதற்கெண்டு மெக்கானிக்மார் இருக்கினம்'' என்ற படி ஒரு வாகனத்தில் ஏறி மறைகின்றார் பஸ் றைவர். இந்தச் செய்கை சொக்கண்ணருக்கு கொதியைக கொடுக்க சன்னதமாடுகிறார் "இவங்களுக்கு இண்டைக்கொரு பாடம் படிப்பிச்சுப்போட்டுத்தான் மிச்ச வேலை.. என்னைப்பற்றி என்ன நினைச்சினம்" என்றபடி பஸ்சை விட்டிறங்கி "இப்பபார் நான் பொலிஸில் முறைப்பாடு செய்துபோட்டு வாறன்" ஆரியகுளச்சந்தியிலிருக்கும் இராணுவகாவலரண் நோக்கிச் செல்கிறார்.அங்கே பௌத்த விகாரைக்கருகில் நின்றிருந்த இரண்டு பொலிஸ்காரரிடம் ஏதோ கதைக்கின்றார். அவர்கள் பஸ்ஸினை நோக்கி வருகின்றார்கள். தங்களுக்குள் ஏதோ கதைத்து விட்டு சொக்கண்ணரை ஒரு கோபப்பார்வை பார்த்து விட்டுச் செல்கின்றனர்.

"ஏனண்ண!பொலிசைக் கூட்டிக்கொண்டந்தனீங்கள்" ஒருவர் கேக்க "அவங்களுக்கும் வேலை வேணுந்தானே. அதுதான் சும்மா விளையாட்டு விட்டுப்பாத்தனான்."ஏளனமாக ஒலிக்கின்றது குரல்.

நேரம் இரவு ஒன்பதைத் தாண்டுகிறது. பஸ் நின்ற இடத்திலேயே நிற்கின்றது.நடத்துநரைத் துளைத்தெடுக்கின்றனர் பயணிகள்.குழந்தைகள், பெண்கள் பெரியவர்கள் என எல்லாரும் பொறுமை இழக்கத் தொடங்கினர்.அப்போது ஒரு மினி பஸ் சனநெருக்கத்தோடு வந்து **C.T.B** பஸ் அருகில் நிற்கின்றது. "நாங்கள் கூப்பிடேக்க பெரிய லெவல் அடிச்சுக்கொண்டு ஏறமாட்டன் எண்டிறவை இண்டைக்கு வாங்கோ உங்களை அழவைக்கிறன் பாருங்கோ".... வந்து நின்ற மினிபஸ்ஸின் நடத்துனர் பெண்களின் பக்கம் திரும்பி சவால் விடுகின்றார். இந்த பஸ்ஸை விட்டால் வீட்ட போக வேற வழியில்லை என்று பெண்கள் வேள்விக்கு விட்ட ஆடுகள் போல அந்த மினிபஸ்ஸில் தொத்திக்கொள்ள ஆயத்தமாகின்றனா "இதவிட்டா வேற பஸ் இல்ல. எல்லோரும் ஒரு மாதிரி சமாளிச்சு ஏறுங்கோ"பெரியவர் ஒருவர் குரல் கொடுக்க முண்டியடிச்சுக்கொண்டு எல்லோரும் ஏறத்தலைப்படுகின்றனர். "தம்பி இஞ்ச குழந்தைப்பிள்ளையளோட நிக்கிறவைக்கு முதலில் வழி விடுங்கோ. பிறகு நீங்கள் ஏறலாம்." ரைற்றானிக் **(titanic)** கப்பலில் போட் ஏறத்தப்பியவர்களின் ஞாபகம் எனக்குள் தோன்றி மறைந்தது...

"பெட்டையளுக்கும் பெடியளுக்கும் நல்ல பம்பல் தான். றைவர் அண்ண கட்டிப்புடி கட்டிப்புடிடா பாட்டுப் போடுங்கோ. நல்ல சோக்காய் இருக்கும்" நாராசமாக எனது காதில் ஒலிக்கின்றது சொக்கண்ணரின் குரல். விருட்டென அவர் பக்கம் திரும்புகின்றேன். நடு றோட்டில் நின்டு கொண்டு மினிபஸ் சாரதிக்குக் கட்டளை இட்டுக்கொண்டிருந்தார்..

"சொக்கண்ணரைத்திருத்த ஏலாது..." இடிச்சிரிப்பை உதிர்த்தபடி அவருக்கு நற்சான்றிதழ் கொடுக்கின்றார் ஒருவர்.. திரும்பிப்பார்த்தால் எனக்கு ஆச்சரியம் கடவுளே! அது கண்ணாடியைப் பறி கொடுத்த நடராஜா மாஸ்ரர். நான் மனதுக்குள் எண்ணிக்கொள்கின்றேன். "இவையள் மாதிரி ஆக்கள் இருக்குமட்டும் சொக்கண்ணரைத்திருத்த ஏலாது". ●



## முல்லாவுடன் சீரியுங்கள்

### முல்லா சாப்பிட்ட அல்வா

இரண்டு சாமியார்களுடன் முல்லா யாத்திரை போனார். மாலையில் ஒரு கிராமத்தை அடைந்ததும், முல்லாவிடம், "நாங்கள் தியானம் செய்கி றோம், நீங்கள் நன்கொடை வசூலித்து வாருங்கள்" என்றார்கள் அந்த இரண்டு சாமியார்களும் . அதன்படியே முல்லாவும் நனகொடை வசூலித்து அதைக் கொண்டு நிறைய அல்வா வாங்கி வந்தார். "இப்போது பசிக்கவில்லை. காலையில் சாப்பிட்டுக் கொள்ளலாம்" என்று அந்தச் சாமியார்கள் சொல்லி விட்டனர். முல்லாவுக்கும், அந்த இரண்டு சாமியார்களுக்கும் அல்வாவை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்ற பிரச்சினை எழுந்தது. பின்பு, "இரவு யார் மிகச்சிறந்த கனவு காண்கிறார்களோ அவர்களுக்குத்தான் அதிகமான பங்கு அல்வா" என்று முடிவு செய்யப்பட்டது.


காலையில் எல்லோரும் எழுந்தார்கள். அதில் ஒரு சாமியார், "என் குரு தோன்றி, நானே சிறந்த சீடன் என்று சொல்லி ஆசீர்வதித்தார்" என்றார். அடுத்ததாக, இரண்டாவது சாமியார், "என் குரு தோன்றி என் தியான சக்தியை மெச்சினார்" என்றார். அடுத்ததாக முல்லா, "என் குரு தோன்றி அல்வா முழுவதையும் நீயே சாப்பிட்டு விடு" என்று கூறியதாகச் சொன்னார். "குரு வார்த்தைக்குக் கீழ்ப் படியாமல் இருக்க முடியுமா? அதனால், அல்வா முழுவதையும் நானே சாப்பிட்டு விட்டேன்" என்றார் முல்லா.

### முல்லாவின் சமாதி

தாம் உயிர்விட்ட பிறகு தனது உடலை அடக்கம் செய்வதற்கான ஒரு சமாதியை முன்னதாகவே கட்டி வைத்துவிட வேண்டும் என்ற ஓர் எண்ணம் முல்லாவிற்கு ஏற்பட்டது. அந்த ஊரில் சிறந்தவன் என்று கருதப்பட்ட ஒரு கொத்தனாரை அழைத்து தன் விருப்பத்தைக் கூறினார் முல்லா. அப்போது முல்லா "கொத்தனாரே, சமாதி நல்ல முறையில் அமைய வேண்டும், அதற்கான கூலியை முன்னதாகவே கொடுத்துவிடுகிறேன்" என்று கூறினார். அதற்கு அந்த கொத்தனார், "முல்லா அவர்களே, எனக்குத் தாங்கள் முன்னதா கவே கூலிதர வேண்டாம். சமாதியின் அமைப்பைப் பார்த்துவிட்டு சமாதி முழுமையடைந்துவிட்ட பிறகு எனக்கான கூலியைக் கொடுத்தால் போதும்" எனக் கூறிய கொத்தனார், உடனே சமாதி வேலையைத் தொடங்கி, மிகக் குறுகிய காலத்திலேயே சமாதியை மிகவும் அழகாகக் கட்டி முடித்து விட்டார். தமக்காகக் கட்டப்பட்ட சமாதியின் அமைப்பு முல்லாவுக்கு மிகவும் திருப் தியாக இருந்தது. உடனே முல்லா, "ஐயா! எனக்கான கூலியைக் கொடுக்கவில்லையே" எனக் கொத்தனார் நினைவுபடுத்த, அதற்கு முல்லா, "சமாதி முழுமையடைந்த பிறகுதானே கூலியை வாங்கிக் கொள்வதாகக் கூறினீர்கள்" என்றார். அதற்கு கொத்தனார், "சமாதியைத் தானே முடித்துவிட்டேனே" என்று கூற, அதற்கு முல்லா "சமாதி முழுமையடைவது என்றால் என்ன அர்த்தம்? நான் மரணமடைந்து என் உடலை இந்தச் சமாதியில் வைத்த பிறகு தானே, சமாதி முழுமை அடைந்ததாக அர்த்தமாகும்" என்றார். இப்பதிலைக் கேட்ட கொத்தனாருக்கு தலை சுற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகக் கதை

# காத்திருப்பு

அண்ணன் தம்பிகள் இருவர் நீண்டகாலமாக தமது தொழிலில் ஆர்வமின்றிப் பலவீனமாகி இருந்தனர். அவர்களுடைய நிலபுலங்கள் அநியாயமாக தரிசு பற்றிப் போகாது, அந்நியர் ஒருவர் வந்து நிலத்தை தமது எண்ணப்படி பயன்படுத்தி நிறையப்பயனைப் பெற்றார்.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த இன்னுமொருவன் பயிர் செய்துகொண்டிருப்பவனை விரட்டி விட்டுத்தான் அந்த நிலத்தில் பயிர் செய்தான். அவனுக்கும் விளைச்சல் அமோகமாகிவிட்டதால் தூரத்து அன்னியன் ஒருவன் இதை நன்றாகக் கவனித்ததால் இத்தனை வளங்களையும் நானே எடுத்துக் கொண்டால்... அந்தத் தூரத்து அன்னியன் பலத்தை அதிகரித்தவாறு வந்து அந்த நிலங்களின் பயிர் செய்த அந்நியனை... வெருட்டி விட்டான். தூரத்து அந்நியனுக்கு எதிர் பார்த்ததை விட அனைத்திலும் ஏராளம் ஏராளம் வருவாய் வந்து குவிந்தது. செழிப்பின் நிறைவில் அவன் திளைத்தது மட்டுமன்றி இந்தச் செல்வங்களையெல்லாம் சுரண்டித் தூரத்துத் தன் தேசத்திற்கே கொண்டு சென்றான்.

தமது செல்வம் அந்நியனால் சுரண்டப்பட்டு, அள்ளிச் செல்லப்படுவதைக் கண்ட அண்ணனும் தம்பியுமாக ஒன்றாக இணைந்தனர். அடுத்தடுத்த நிலங்களிலும் இதே பிரச்சினைகளால் அங்கு எழுந்திருந்த போரின் உக்கிரத்தைத் தாங்க முடியாத தூரத்து அந்நியன் சோலிகளிலிருந்து விலக அவரவர் நிலங்களை அவர்களிடமே கொடுத்து விட்டுச்சென்றான்.

அண்ணனும் தம்பியுமாகப் பிரிந்து கொள்ளாது ஒத்து நின்றதால் இவர்களது நிலத்தின் சகல உரிமைகளையும் இளையவனான தம்பியிடமே கொடுத்துவிட்டான் அந்நியன்.

அண்ணனை வஞ்சித்துத் தனது வாழ்வையும், தன் பிள்ளைகள் வாழ்வையும் வளப்படுத்தினான் தம்பி.

அண்ணன் தாங்கித் தாங்கி அறவழிகள் எடுத்துரைத்து பாவ புண்ணியமுரைத்து - ஒற்றுமையின் பலமுரைத்து எல்லாம் விழலுக்கிறைத்த நீராகிப்போனது.

அண்ணன் மேல் நோக்கிப்பார்த்து பிரார்த்தித்தார். ஆனால் அண்ணனின் பிள்ளைகள் பொறுத்தது போதும் , பொங்கடா பொங்கி எழு என்று எல்லோரும் ஒன்றாகி அந்தச் சித்தப்பாவின் அட்டாதுட்டித் தம்பிமாரின் கொட்டமடக்கப் போரிட்டனர். தம்பிக்கு பிள்ளைகள் ஏராளமாயிருந்ததால் அயலவரெல்லாம் உதவிகள் செய்து கொண்டனர்.


அண்ணனின் பிள்ளைகள் எண்ணிக்கையில் குறைந்திருந்தபோதும் புத்திசாதுரியம் வீரம் எல்லாமே முன்னேற்றகரமான உச்சம்தான்.

சொல்லுக்கடங்காத தம்பியின் பிள்ளைகள் தோல்விமேல் தோல்விகளைக் கண்டு ஓடி ஓடி அபயங்கோரினர்.

அண்ணனின் பிள் ளைகள் நிமிர்ந்து நின் றனர். துணிவாக பக் கத்துவீடு... அடுத் தடுத்த வீடு... ஒப்புக்கு உறவான வரென்று பலர் வந்து சமாதானம் பேசினர்.

சண்டை நின் றது.

உரியபங்கைக் பங்குரிமையில் கொடுக் கத் தம்பியின் பிள்ளைகட்கு விருப்பமில்லை. இழுபறி நாடகமாகி... யோசிக்கிறோம்... திட்டம் போடுகிறோமெனக் காலத்தைக் கடத்தினர்.



இடையில் யாருமே இல்லாத நிலை யில் அண்ணனது பிள்ளைகளும் தம்பியின் பிள்ளைகளும் நேருக்கு நேர் பேசிக்கொண்டபோது... தம்பியும் அவரது பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் மீண்டும் பழைய குருடி கதவைத்திறந்த கதையாகிப்பேசினர்.

அண்ணனின் மகனின் மகன், எங்கள் உரிமையை எமக்குப்பெற வழி தெரியும். இனி அந்த வழிக்கு குறுக்காக நிற்பவரைச் சரித்துவிட்டு எமது உரிமையை பெறுவோமென்றான் நிதானமாக -

எல்லோர் முகத்திலும் பீதி தெறித்தது...

இன்னொரு குருசேத்திரமா...?

சமாதானம் பேசி சிலர் யோசித்தனர்... சிலர் சிந்தித்தனர்... இன்னும் சிலர் இரண்டிற்கும் இடையே அல்லாடிக்கொண்டனர்.

உரிமைக்காரர்களோ உறுதி குலையாத நிலையில் காத்திருந்தனர். தெளிவாக எதையோ தெரிந்தது போல.

ஆனால் இந்தக் காத்திருப்பு கைகூடுமா?

புயலின் முந்திய அமைதியா அல்லது பிந்திய அமைதியா?

எல்லோரது முகத்திலும் இந்தக் காய் கனியுமா?

என்ற கேள்விக்குறி தெளிவாகத் தெரிந்தது.

காலத்தின் கனிவிற்காக எல்லோரும் காத்திருக்கின்றனர். ●

**வளவை வளவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- வீடியோ பெருமையினை
விரிவாக நான்பாட
விநாயகனே நீயென்றும்
காப்பு!

- வீடியோ என்றொன்று
வந்திங்கு அதுகாட்டும்
விளையாட்டுக்
களவில்லைக் காண்!

- வீடியோ இல்லாத விழாவெல்லாம் விழாவில்லை!
விழாவிற்கு வீடியோவே தலை!

- கலியாண மண்டபத்தில் வீடியோ ஆடுகின்ற
சதிராட்டத்துக் களவில்லைக் காண்!

- சுபமுகூர்த்த வேளைசற்றுக் கடந்தாலும் காத்திருப்பார்
வீடியோ வரும்வரையில் தான்!

- வீடியோ வரும்வரையில் குருக்களும் காத்திருப்பார்
வீடியோ பெருமைக்கோர் சான்று.

- வீடியோ சொல்லும்வரை தாலியினைத் தொடமாட்டார்
வீடியோ ஆட்சிக்கோர் சாட்சி!

- கன்னியின் முகம்பார்த்து தாலியினைச் சூட்டாது
வீடியோ முகம்பார்ப்பான் காளை!

- வீடியோ பிடிப்போர்கள் அணிவகுத்து நிற்பதனால்
விழா நிகழ்வு காண்தல் அரிது.

- பூப்படைந்த கன்னிக்கு நீராட்டும் விழாவிலது
புரிகின்ற வித்தைகளோ நூறு!

- கிணற்றடியில் உருவாக்கும் நீர்வீழ்ச்சி யிலேகன்னி
குளிப்பதுமோர் வீடியோக் காட்சி!

- கன்னியுடை மாற்றுகின்ற அறையுள்ளே நுழைந்திடவும்
பின்நில்லார் வீடியோ காண்!

- சேலையினைச் சீர்செய்வார் கன்னியின் முகம்பிடிப்பார்
சேட்டைகளைப் பார்த்திருப்பர் பெற்றோர்1

- "மிக்ஸிங்" செய்வதென்று கன்னிக்கு வீடியோ
தரும்வதைகள் ஒன்றல்ல நூறு!

- கன்னியிடம் உண்டாகும் கூச்சத்தில் அரைப்பங்கு
வீடியோ போக்கிவிடும் காண்!

- சிறப்பாக வீடியோ அமையுமென்ற ஆசையிலே
சிரித்தபடி பார்த்திருப்பார் பெற்றோர்!

- வீடியோ படம்பிடிக்க வரும்போ ததன்பின்னால்
விரைந்துவரும் பெரியதொரு அணி!

- குடைபிடிக்கத் திரைபிடிக்க மின் விளக்குப் பிடிக்கவென்று
குழுவொன்று பின்தொடரக் காண்!

- தாமரைக் குளமமைக்கத் தொட்டியுடன் தாமரைப்பூ
வீடியோ கொண்டுவரும் காண்!

- விழாவினிலே நிகழ்பவற்றைப் படம்பிடிப் பதைவிட்டு
வீடியோ காட்டுமே வித்தை!

- விழாவுக்கு வாராது வந்ததென்று பொய்யுரைத்தால்
வீடியோ விளம்பிடுமே உண்மை!

- வீடியோ மோகமெங்கள் பண்பாட்டைச் சிதைக்குதையோ!
விழித்திடுவாய் தமிழினமே கடிதில்!

–முருகு




ஒரு பஸ் பிரயாணி இ.போ.ச சாரதியைப் பார்த்து :- முன்னுக்குப் போற மினி பஸ்சை முந்தி ஓட முடியாதோ?

கொண்டக்டர் :- மெல்லப் பேசு......
முன்னுக்குப் போற மினி பஸ் டிரைவருடைய சொந்த மினிபஸ்.

பிரயாணி :- ?!


பாணபத்திரன்



ஒருவர் :- என்ன உங்கள் மினி பஸ்சில் குழந்தை ஒன்று கொண்டக்டராகப் பணியாற்றுகின்றதே...!

டிரைவர் :- மினிபஸ்ஸில் மினிக் கொண்டக்டர் தானே இருப்பார்!

ஒருவர் :- --------- ?!



- எடியே ராணி பக்கத்து வீட்டு ரதி, ஒரு பெடியனோட ஓடிட்டாள்.
- அதுக்கென்ன இளசுகளெண்டால் அப்படித்தானே செய்யுங்கள்..........
- கூட்டிக்கொண்டு போனது, உன்ர மகனையடி........

வீ.ஏ.விந்தன்



- கம்பஸில மத்தியான நேரம் அவளை ஒருக்காலாவது கண்டாத்தான் சாப்பிட மனம் வரும் என்கிறாயே! அந்தளவுக்கு அவளில பிரியமா உனக்கு....?
- அதொண்டும் இல்லையடா. அவளட்டைக் கடன் வாங்கித்தான் கன்ரீனுக்குப் போறனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக் கதை

# ஒரு ஆச்சியின் கதை

வல்வையூரான்

கல்வி கற்பதற்கு வயது ஒரு பொருட்டல்ல என்பார்கள். நான் 95ஆம் ஆண்டு ஜப்பான் மொழி கற்பதற்காக திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் வகுப்புக்குச் சென்ற பொழுது அவ்வகுப்புக்கு வந்திருந்தவர்கள் அனைவருமே இளைஞர்கள், யுவதிகள். ஐம்பது வயதைத் தாண்டிய எனக்கு அவர்களோடு சேர்ந்திருந்து எப்படிப் படிப்பது என்றதோர் தயக்கம். "கல்வி கற்பதற்கு வயசில்லை, நீங்களும் தாராளமாகக் கற்கலாம்" என அப்பொழுது பேராசிரியர் திரு.சண்முகதாஸ் அவர்கள் கூறியிருந்தார்.

அதன் பின்பு 99ஆம் ஆண்டளவில் மல்லாவியில் முறை சாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட 'இதழியல்' கற்கை நெறி வகுப்புக்கு நானும் ஒரு மாணவனாகச் சென்ற பொழுதும் என்னோடு இதழியல் கற்கை நெறியைக் கற்றுத் தேறியவர்கள் இளைஞர், யுவதிகளே. நான் ஒருவனே 'நைன்டி'. ஏன்? இப்பொழுது சிங்களமொழியைக் கற் பித்துக்கொண்டு வரும் அதே வேளை, நேரம் கிடைக்கும் போதெல்லாம் மேற்கொண்டு முயற்சி செய்து சிங்கள மொழியைக் கற்று வருகின்றேன்.

"அறுபது வய தாகிவிட்டுது, அப்பா வுக்கு இப்பவும் ஒரு படிப்பு?" என என் பிள்ளைகள் என்னை ஒரு மாதிரியாகப் பார்ப்பதும் எனக்குத் தெரியாமலில்லை. ஆனால், இணையத்தளமொன்றில் வெளியாகிய அந்தச்



செய்தி, நான் உயிரோடு இருந்தால், இன்னும் இருபது முப்பது வருடங்களுக்கு வேண்டுமானாலும் கல்வி கற்கலாம் என்ற அந்த நம்பிக்கையை எனக்குள் ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆம்! அந்தச் செய்தி நிச்சயமாக உங்களுக்கும் ஆச்சரியத்தைத் தரலாம். எண்பத்து நான்கு வயதில் இப்பொழுதும் கல்வி கற்பதன் பொருட்டு பள்ளிக்குச் சென்று வரும் ஒரு புதுமையான ஆச்சியின் கதையையே உங்களுக் குத் தரப்போகின்றேன்.

மேற்கு பங்களாதேஸில் சௌதன்கான் என்ற கிராமத்தில் 84 வயது ஆச்சியான பாத்திமா காத்துன் என்பவர் இப்பொழுதும் பள்ளி செல்கின்றார். அதற்குக் காரணம் அவர் 7 வயதுச் சிறுமியாக இருந்த காலத்திலேயே திருமணம் நடைபெற்று விட்டதனால் உரிய வயதில் பள்ளி செல்லும் பாக்கியம் அவருக்குக் கிடைக்க வில்லை. இப்பொழுது அவர் முன்பு தன்னால் பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் போன பள்ளி வாழக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக இப் படி முயற்சி செய்கின்றார்.

ஜதம்பூர் அரச ஆரம்பப் பாடசாலையில் 4A வகுப்பில் கல்வியைப் பெறும் பாத்திமா தினமும் உட்கார்ந்துகொள்வது முன்வரிசையிலேயே. ஒன்பது, பத்து வயதுப் பிள்ளைகள் நீல நிறச் சீருடைகள் அணிந்து வந்து ஆச்சியோடு அமர்ந்து கொள்கின்றார்கள். "இந்த வயதிலும் என்னைப் பள்ளிக்குச் சேர்த்துக் கொண்டது எனது அதிர்ஷ்டம்" அவர் பி.பி.சி. வானொலியின் நேர்காணலின் போது இவ்வாறு கூறியிருந்தார்.

உண்மையில் சிறு பிள்ளைகளைப் போன்று பாடப் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு செல்வது பற்றி எனக்கு சிலவேளைகளில் வெட்க உணர்வு ஏற்படுகின்றது. அப்படியான வேளைகளில் நான் அவற்றை எனது சாறியினுள் மறைத்து எடுத்துச் செல்வேன்" பாத்திமா சிரித்துக்கொண்டே கூறுகின்றார்.

பாத்திமா இன்னும் கரும்பலகையில் வெண்கட்டியினால் 'பங்ளா' மொழியின் எழுத்துக்களை எழுதுகின்றார். அவர் முதலில் இந்தப் பள்ளிக்கு வந்திருந்தது தனது பேத்தியை இந்தப் பள்ளியில் சேர்த்த நேரத்தில் அவளோடுதான்.

"அந்த நேரத்தில் குரானின் வரிகளை நான் எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு இருந்தேன். அதனைக் கேட்ட பள்ளி அதிபர், "மாமி உங்களுக்கு அது புரிகிறதா?" என்று கேட்டார். நான் ஆம் என்று சொன்னேன். அப்பொழுது அவர் என்னிடம் வெண்கட்டி ஒன்றைக் கொடுத்து அந்த வரிகளை எழுதும்படி கூறினார். ஆனால் எனக்கு எழுதவோ வாசிக்கவோ என்று முடியாது" பாத்திமா விபரித்தார்.

பாத்திமா சிறுமியாக இருந்த காலத்தில் அந்த முழு மாவட்டத்தி லுமே பள்ளிக்கூடம் இருக்கவில்லை. பள் ளிக்குச் செல்வதற்குப் பதிலாக அவருக்கு நிகழ்ந்தது ஏழாவது வயதில் திருமணம் முடித்தலே.

"அந்தக் காலத்தில் பெண் பிள்ளைகள் சின்னஞ் சிறுபராயத்திலேயே திருமணம் புரிவது சாதாரண ஒரு செயலாகும். அந்தக் காலத்தில் பெண் பிள்ளை களுக்கு பெரிய பெறுமதி இருந்தது. எனது தாயாரும் உறவினர்களோடு ஒன்றிணைந்து எனக்குத் திருமணத்தை ஆயத்தம் செய்தார். என்னுடைய அப்பாவின் சகோதரியின் மகனை திருமணம் முடிவு செய்யப்பட்ட பிறகும் நான் தொடர்ச்சியாக மற்றைய பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டு எனது தந்தையாரின் வீட்டிலேயே இருந்தேன். இவ்விதமாக சிறு பராயத்திலே திருமண மரபுகள் இடம் பெற்றாலும் சம்பிரதாயங்களுக்கு அமைய தங்களது பெற்றோர்களுடன் தான் அவர்கள் இருப்பார்கள். எனக்கும் எனது கணவருக்கும் ஒருவரை ஒருவர் காணக்கிடைத்தது பல வருடங்களுக்குப் பின்பே" பாத்திமா தனது கடந்தகாலக்

கதைகளை விபரிப்பது அப்படித்தான்.

எப்படியாயினும் இன்று பாத்திமாவின் ஒன்பது வயதுப் பேத்தி தஸ்லிமாவினுடைய வாழ்க்கை முறையென்றால் முழுமையாகவே வேறு. அவள் கற்பது பாத்திமா கற்கும் அதே வகுப்பிலேயே.

"இப்பொழுது எனது பேத்தி தஸ்லிமா போன்ற பெண் பிள்ளைகள் பாலியப் பருவத்தில் திருமணம் செய்வதற்குப் பதிலாக பாடசாலை செல்கின்றார்கள். அந்தக் காலத்தில் எங்களுக்கு உள்ள பள்ளிக்கூடங்கள் இருந்ததும் மிக மிக அதிக தூரத்தில். எப்படி நாங்கள் கல்வி கற்பது?"

தனது பாட்டி வகுப்பில் உள்ள தன் நண்ப, நண்பியர்கள் மத்தியில் பிரசித்தமானவர் என்று தஸ்லிமா கூறுகின்றார். "இருவரிலும் யார் அதிக புள்ளியைப் பெறுவது?" என இந்த நேர்காணலின் போது கேட்கப்பட்டபொழுது பாட்டியும் பேத்தியும் ஒருவர் முகததை ஒருவர் பார்த்தவண்ணம் சிரிப்பதற்கு ஆரம்பித்தார்கள்.

இறுதியில் தஸ்லிமா தான்தான் அதிக புள்ளிகள் பெறுவதாகக் கூறினார்.

பாத்திமாவின் இந்தப் பள்ளிப் பயணம் ஜடாம்பர் பிரதேசத்தில் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவளது காலடித் தடத்தில் சென்று இப்போது மேலும் இளம் பெண்மணிகள் நால்வர் இந்த வகுப்பில் கல்வி கற்கின்றார்கள். இவர்களில் ஒரு பெண்மணி 'சஹீடா' இவ்வாறு கூறுகின்றார்.

"நான் இங்கு வந்தது ஏதாவது கற்கவே. கற்கவேண்டும் என எனக்குத் தோன்றியது. நான் முன்பு கல்வியைப் பெற்றிருக்கவில்லை".



மனைவி : வீட்டிற்குள் புகுந்து திருடி வீட்டு சமைத்து வைத்தவைகளைச் சாப்பிட்டும் போய் விட்டான். வாருங்கள் பொலிஸில் புகார் கொடுத்துவிட்டு வரலாம். பொலிஸ் கொடுக்கிற அடியில் ஆஸ்பத்திரியில் அவன் இருக்க வேணும்.

கணவன் : வேண்டாம், பாவம் நம் வீட் டில் சாப்பிட்டபடியால் அவன் ஆஸ்பத் திரியில் தான் இருப்பான்.

"கடந்த காலத்தில் என்றால் கல்வியின் பெறுமதி எனக்குத் தெரிந்திருக்கவே இல்லை. ஆனால், இப்பொழுது அதைப்பற்றி ஏதாவது செய்யவேண்டும் என்று எனக்குத் தோன்றுகின்றது" மேலும் ஒரு இளம் யுவதியான முஸாம்மத் கோமேலா கூறுகின்றார்.

"அரபி பாஷையில் எழுதியிருக்கும் குரான் எனக்குப் புரியவில்லை. நாங்கள் இங்கு வந்தது கல்வி கற்கவே" கோமேலா மேலும் கூறுகிறார்.

தனக்குப் பாத்திமா போன்று திறமையான மாணவியாக வரமுடியும் என மற்றுமோர் வயசான ஒரு மாணவி கோர்ஜன் நிஸா சொல்கிறார்.

"நான் கற்பதில் அர்த்தம் இருக்கிறது. பாத்திமா என்னை விட அதிகம் வயதானவர். அவருக்கே அது முடியுமென்றால் ஏன் எனக்கு முடியாது?" எதையாவது கற்றுக் கொள்வது எனக்குப் பயனுள்ளது. அப்பொழுது எனக்கும் சப்தமிட்டு குரானை வாசிக்க முடியும். எனக்கு அது போதும்" இப்படி ஜோர்ஜான் நிஸா கூறுகின்றார்.



*ஒரு சமயம் பாரதியாரின் பெண் தங்கம்மாளை அவரது பாட்டி சீக்கிரம் குளித்துவிட்டு வரும்படி கூறினார். அதற்குத் தங்கம்மாள் "குளிக்காவிட்டால் என்ன பாட்டி? எனக்கு உடம்பு சரியில்லை. என்னவோ போல இருக்கிறது" என்றாள்.*

*"என்னம்மா இப்படிச் சொல்லுகின்றாய்! குளிக்கா விட்டால் உடம்பு சரியாகிவிடுமா? "குளித்துத் தேறு! கொடுத்துத் தேறு" என்று தெரியாமலா ஔவையார் சொல்லியிருக்கிறாள்?" என்றாள் பாட்டி.*

*பாரதியார் அடுத்த அறையிலிருந்து, "ஆம், வாஸ்தவம். அம்மா சொல்வது உண்மை, மிகவும் உண்மை! சோர்ந்த உடலுக்கு ஸ்நானம் ஆரோக்கியம் அளிக்கும். நைந்த மனத்துக்கு தானம் ஆறுதலளிக்கும்" என்றார்.*

*உடனே பாரதியாரின் மனைவி; "வந்தது வினை. ஏற்கனவே வாங்கி வைத்த சாமானை வீட்டிலிருக்க விடமாட்டார். நீ வேறு தானத்தின் உயர்வைப் பற்றிப் பேசினால் கேட்க வேண்டுமா?" என்றார்.*

*சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு பிச்சைக்காரன் வந்து "ஐயா. ஒரு கிளிஞ்ச வேட்டி கொடுங்க" என்றான்.*

*உடனே பாரதியார் தான் அணிந்திருந்த வேட்டி, மேற்சட்டை, தலைப்பாகை உள்பட எல்லாவற்றையும் அவனிடம் கொடுத்துவிட்டு லங்கோட்டுடன் உள்ளே வந்தார்.*

*இதைக் கண்ட அவரின் மனைவி, "என்ன இது?" என்றார்.*

*"கொடுத்துத் தேறினேன்!" என்றார் பாரதியார் அமைதியாக.*

***"பாரதியாரின் சுவையான அனுபவங்கள்" என்ற நூலிலிருந்து***

பள்ளியின் பெண் அதிபரான முஹம்மட் சலேஹெஹ், பாலர் பாடசாலைக்கு இளமைப் பருவமடைந்த மாணவிகள் அதிக அதிகமாக வருவது பற்றிக் கதைக்கும் பொழுது ஓரளவு வெட்கத்துடனேயே கதைக்கிறார்.

"இது எங்களுக்கு ஓரளவு பிரச்சினையாக இருக்கலாம். எங்களது அடிப்படைப் பொறுப்பு பிள்ளைகளுக்குக் கற்பித்தலே. இது ஆரம்பப் பாடசாலை. இந்த வயதில் உள்ளவர்களைச் சேர்த்துக் கொண்டதும் எனக்குப் பல அலுவலகங்களுக்குச் சென்று பலவிதமான படிவங்களை நிரப்பவேண்டி ஏற்படுகின்றது. ஆனால், அவர்களது தைரியத்தையும் முயற்சியையும் கண்டதும் எனக்கும் அதிக முயற்சியை அதன் பொருட்டுத் தாங்கவேண்டும் போலத் தோன்றுகின்றது" என்று அவர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியோர் முதல் பெரியோர் வரை யாவரும்
விரும்பி அணியும் அசல் 22 கரட் தங்க
ஆபரணங்களை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

வைதிஸ் நகைமாடம்

இல: 89, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சகலவிதமான பாடசாலை நூல்களும்,
உபகரணங்களும், சிறுகதை, கட்டுரை, நாவல்,
கவிதை நூல்கள், தமிழ்ழ வெளியீடுகள், பொது
அறிவு நூல்கள், அலுவலகப் பொருட்கள்
அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்

அறிவுப்
பொத்தகசாலை

தண்ணீருற்று - முள்ளியவளை
இரணைப்பாலை வீதி - புதுக்குடியிருப்பு
பரந்தன் வீதி - வீஅவமடு
சந்தையடி - வட்டக்கச்சி
யாழ்சாலை - கிளிநொச்சி
மாங்குளம் சாலை - மல்லாவி
அக்கராயன் வீதி - ஸ்கந்தபுரம்
மன்னார் சாலை - நாச்சிக்குடா, முழங்காவில்

விற்பனையாகிறது




எல்லாப் புத்தகசாலைகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் தன்னிகரற்ற நகைச்சுவை ஏடான சிரித்திரன் மீண்டும்
வெளிவருவதையிட்டு மகிழ்கிறோம் - வாழ்த்துகிறோம்.



உங்கள் நிகழ்வுகளைப் படம் பிடிக்கவும்
கலர்ப்படச் சுருள்களை பிரதி செய்யவும்
மற்றும் வீடியோ படப்பிடிப்புக்களுக்கும்



# சாயி போட்டோ

1010/11 கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகள்:
இரா.பற்குணம், வண்ணைக் கலைவாணர் நாடக மன்றம்.

உரிமையாளர்: ப.கருணாநிதி.

FedEx Express®

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

WESTERN UNION®





பணப் பரிமாற்றம்

இப்பொழுது உலகின்
எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள்,
கடிதங்களை அனுப்பிட நீங்கள்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்



இப்பொழுது உலகின்
எப்பாகத்திலிருந்தும்
துரிதமாகப் பணத்தைப்
பெற்றுக்கொள்வதற்கு

# திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Cylon Distributors)
Tel: 021 222 7835
Fax: 021 222 7836
E.mail:- thirumuruglan@lycosmall.com



46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(பலநோக்கு கூ.ச. முன்பாக)
Tel: 021 222 7560
Fax: 021 222 7310




PUBLIC LIBRARY
JAFFNA.
VANNARPONNAI BRANCH LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SLCS கணனி சேவைகள்

125A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 4590686

எமது சேவைகள் :
- Sales
- Networking
- Repairs, Maintenance & Services
- Software Developing & Training

- Computers/ Laptop - Intel / AMD / Celeron
- Branded PC / Servers
- Computer Accessories
- Network Accessories and Tools
- Scanners - HP / Genius / Epson / Mercury
- Printers - HP / Epson / Cannon
- UPS, Stabillizer
- Computer Tables & Chairs and etc.

**WEDGE**

- T.V, VCD, DVD Players
- Home Theater Systems
- Amplifiers, Speakers
- Sound Systems
- Karaoke M[illegible]phones
- Largest Collection of Karaoke

VCD & Musical DVD Disks

**ACCESS SOLAR**

- Solar Lights Systems
- Hot Water Systems



**KHIND** மின்சார நுளம்புக் கொல்லி

Coils தேவையில்லை Mats தேவையில்லை Nets தேவையில்லை

பழுதுபார்க்குமிடம் :

178 (144), அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 4590199



இப்பத்திரிகை திருமதி கோ.[illegible] அவர்களின் சார்பில் 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ச.யோகரெத்தினம் அவர்களால் அதே முகவரியில் [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org